www.padippakam.com

இலங்கையில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது. Registered as a Newspaper at the G.P.O

# புதிய கண்ணோட்டம்

PUTHIYA KANNOTTAM

පුදිය කණ්ණෝට්ටම්

வெளியீடு: 35 | 01 சித்திரை 1997 | விலை: ரூபா 7.00

**1994 பாராளுமன்றத் தேர்தல் - 48.9%**

**1994 ஜனாதிபதித் தேர்தல் - 62.2%**

**1997 உள்ளூராட்சித் தேர்தல் - 51.0%**

# மீண்டும் மீண்டும் மக்கள் ஆணை?

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் எதனைப் புலப்படுத்துகிறது? மேலெழுந்த அபிப்பிராயங்களுக்கப்பால் பொதுஜன முன்னணி அரசின்மீது சிங்களமக்களின் அபிமானம் குறையவில்லை என்பதனைத்தான் இத் தேர்தல் முடிவுகள் புலப்படுத்துவதாக தகவல் தொடர்புச் சாதனங்கள் கூறுகின்றன.

இந்த உள்ளூராட்சித் தேர்தலை அரசு தனது தீர்வுத்திட்டயோசனைகளை அமுல்படுத்துவதற்கான மக்கள் ஆதரவு கோரும் தேர்தலாகவே அறிவித்திருந்தது.

50 சதவீதத்திற்கு மேலான மக்கள் பொதுஜன முன்னணிக்கும் அதன் கூட்டணிக் கட்சிகளுக்கும் சுயேட்சைக் குழுக்களுக்கும் வாக்களித்துள்ளனர்.

எனவே இனப் பிரச்சினை தீர்வுத் திட்ட யோசனைகளை, தமிழ் மக்களின் சுயமரியாதை கௌரவம் ஆகியவற்றை உறுதிப்படுத்தும் விதத்தில் செழுமைப்படுத்தி நடைமுறையை நோக்கி முன்செல்வதில் எதுவித தயக்கமும் தேவையில்லை.

தீர்வுத் திட்ட யோசனைகள் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்திசெய்யும் விதத்தில் செழுமைப்படுத்தப்பட வேண்டும்.

பாராளுமன்றத்தில் தீர்வுத்திட்ட யோசனைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

பெருவாரியான சிங்கள மக்களின் விருப்பம் இனப்பிரச்சினைக்கு 'நீதியான சாமாதானத் தீர்வு' என்றிருக்கையில் இங்கு யாருக்கும் பயப்படவேண்டிய அவசியமில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாவிட்டால் அவர்கள் மேலும் மேலும் சிங்கள மக்களிடம் தனிமைப்பட வேண்டிய நிலையே உண்டு.

மக்கள் மூன்று முறை ஆணை வழங்கி விட்டார்கள். எனவே திரும்பத் திரும்ப இதனைப் பேசிக் கொண்டிருப்பது மக்களுக்கு எரிச்சலையூட்டும்.

பொதுஜன முன்னணி அரசு பதவியேற்ற பின் இனப்பிரச்சினைக்கு நீதியான நியாயமான தீர்வு கிடைக்கும், சமாதானம் மலரும் என எதிர்பார்த்த தமிழ் மக்களுக்கு ஏமாற்றமே இந்த இரண்டரை வருடங்களில் மிஞ்சியது. அதனால் தான் வடகிழக்கிற்கு வெளியே வசிக்கும் தமிழ் மக்கள் இந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் அவ்வளவாக ஆர்வம் காட்டவில்லை போல் தெரிகின்றது.

தமிழ் மக்கள் விரக்தியின் எல்லையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நாளாந்தம் தமிழர்கள் என ஞாபகமூட்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கைதுகள், பாஸ் கெடுபிடிகள் என்பன அவர்களை, நாமும் இந்தநாட்டின் பிரசைகளா என ஐயுறும் அளவிற்கு அன்னியப்படுத்தியுள்ளது. இந்தப் பாரதூரமான பிரச்சினை சரியான முறையில் விளங்கிக் கொள்ளப்பட வேண்டும்.

அரசினால் நியமிக்கப்பட்ட மனித உரிமைகள் பாதுகாப்புக் குழுவோ கையாலாகாத குழுவாக மாறிவிட்டது.

அதேபோல் மலையக மக்களுக்கு லயன்களைச் சொந்தமாக வழங்குவது என்பதும் கடந்த இரண்டு வருடங்களாகப் பேசப்பட்டு வந்தது. அவர்களுடைய ஊதியம், தோட்டக் கம்பனிகளின் சுரண்டலிலிருந்து பாதுகாப்பு என்பன உறுதிப்படுத்தப்படவில்லை. அதனால் அவர்கள் எரிச்சலடைந்துள்ளார்கள்.

சொல்லப்படும் விடயங்கள் நடைமுறைக்கு வரவேண்டும் என்ற எதிர்பார்ப்பு மக்களிடம் இருக்கிறது.

பிரச்சினைகளுக்கான தீர்வு இழுபட்டுப் போகும்போது சிங்கள மக்களும் விரக்தியடையலாம் நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் மூலம் சிங்கள மக்கள் சில விடயங்களை மௌனமாகத் தெரிவித்துள்ளார்கள்.

தம்மீது சுமத்தப்பட்டு வருகிற யுத்தத்தின் நேரடி, மறைமுக அழுத்தங்களுக்கு விரைவாக முடிவு கட்டப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பையும், அரசியல் கட்சிகள் இனப்பிரச்சினையுடன் இனியும் விளையாடிக் கொண்டிருக்கக் கூடாது என்ற எச்சரிக்கையையும் மீண்டும் ஒருமுறை அழுத்தந் திருத்தமாக முன்வைத்துள்ளார்கள்.

எனவே, இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வு, சமாதானம் என்ற மக்களின் எதிர்பார்ப்பு காலந்தாழ்த்தாது நிறைவேற்றப்பட வேண்டும்.



---

**ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி**

**EELAM PEOPLE'S REVOLUTIONARY LIBERATION FRONT**

பத்திரிகைகளுக்கு அறிக்கை

வடகிழக்கு தவிர்ந்த சிங்களப் பெரும்பான்மை மக்களைக் கொண்ட 17 மாவட்டங்களில் நடந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க அவர்களின் ஆளும் கட்சியான பொதுஜன முன்னணி அமோக வெற்றியீட்டியுள்ளது. தேர்தல் முடிவுகளை ஆராயும்போது இரண்டரை வருட பொதுஜன முன்னணி ஆட்சி மீது மக்கள் மீண்டும் தமது நம்பிக்கையை உறுதிப்படுத்தியுள்ளனர் என்பது தெரிகிறது. பொதுஜன முன்னணியின் ஆதரவுடன் போட்டியிட்ட இ.தொ.கா., சுயேட்சைக் குழுக்கள் ஆகியவற்றின் வாக்குகளுடன் சேர்த்துப் பார்க்கும்பொழுது 50சதவீதத்திற்கு மேற்பட்ட வாக்காளர்களின் நம்பிக்கையை இவ்வரசு பெற்றுள்ளது.

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு, பொருளாதாரச் சுமைகளின் மத்தியிலும் பெரும்பான்மை மக்களின் நம்பிக்கையை இவ்வரசு பெற்றுக் கொண்டுள்ளதானது, 1994ம் ஆண்டு சந்திரிகா அவர்கள் வழங்கிய 'பேச்சுவார்த்தை மூலம் யுத்தத்திற்கு முடிவுகண்டு, சமாதானத்தை உருவாக்குவேன்' என்ற உறுதிமொழிமேல் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை மீண்டும் அழுத்தமாய்க் காட்டியுள்ளது.

அதிகாரப் பகிர்வுக்கு எதிராகவும், சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்கு எதிராகவும் தீவிர பிரசாரத்தை மேற்கொண்ட கட்சிகள் சிங்கள மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ளமையானது, அவர்கள் இனவாத அரசியலை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைக் காட்டுவதுடன், அதிகாரப் பகிர்வினூடாக இனப்பிரச்சினையைத் தீர்க்கலாம் என்ற சிங்களச் சாதாரண மக்களின் அரசியல் முதிர்ச்சியையும் எடுத்துக் காட்டுகின்றது.

மக்களின் இவ்வரசியல் முதிர்ச்சியை இந்நாட்டு அரசியல் கட்சிகள், முக்கியத்துவம் மிக்க இத் தருணத்திலாவது புரிந்துகொள்ள வேண்டும். அத்துடன் வடகிழக்கு தமிழ் மக்களுக்கு ஓர் சுயாட்சியை வழங்குவதை சிங்கள மக்கள் எதிர்க்கவில்லை என்பதையும் இக்கட்சிகள் சரியானபடி விளங்கிக் கொள்ள வேண்டிய நேரமிது.

இது விடயத்தில் மக்கள் அரசியல்வாதிகளை விட முன்நோக்கிய பார்வையை கொண்டுள்ளார்கள் என்பதை நாம் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். எனவே முக்கிய இரு கட்சிகளும் தமது குறுகிய கட்சி நலன்களைக் கைவிட்டு தமிழ் மக்களுக்கு ஓர் கௌரவமான தீர்வைக் காண ஒன்றுபட்டு முன்வர வேண்டும்.

அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதன் மூலம் இந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர பொதுஜன முன்னணி அரசாங்கம் எடுத்த முன்முயற்சியை மக்கள் சந்தேகத்துக்கு இடமின்றி அங்கீகரித்துள்ளார்கள் என்பதே இத் தேர்தல் முடிவுகள் காட்டும் உண்மையாகும். ஆகவே எவ்வித தயக்கமுமின்றி இம் முன்முயற்சிகளைத் துரிதப்படுத்தி தமிழ் மக்களுக்கு கௌரவமான ஓர் தீர்வைக் காண அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென ஈ.பி.ஆர்.எல்.எப். கோருகின்றது.

www.padippakam.com



# கண்ணோட்டம்

## "நிறைவேற்றுக்குழு முறை" தெரிவுக்குழுவில் புதிய குண்டு

பாராளுமன்றத் தெரிவுக்குழுவானது 'மே மாதம்' இனப்பிரச்சினை தீர்ப்பதற்கான அதிகாரப் பகிர்வு என்ற தீர்வுத் திட்டத்தை சட்ட வரைவாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமென, நீதி அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஆனால் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கும் ஓரிரு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்துப்படி பல விடயங்கள் தீர்வை எட்டாமல் அரைகுறையாக இருக்கின்றதென குறிப்பிடுகிறார்கள். ஆனால் இ.தொ.கா.வைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ரூபவாகினியில் பேட்டி அளிக்கும் போது கணிசமான விடயங்களில் சகல கட்சிகளுக்குமிடையில் கருத்தொற்றுமை ஏற்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார். தெரிவுக்குழுத் தலைவரான பேராசிரியர் பீரிசும் இதனையே குறிப்பிடுகின்றார். இதில் யார் சொல்வது உண்மை என்பதை காலம் தான் நிரூபிக்க வேண்டும்.

இங்கு முக்கியமான விடயம் என்னவெனில் அதிகாரப் பகிர்வு சரியான முறையில் நடைபெற வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டு ஈ.பி.ஆர்.எல்.எப். உட்பட 5 தமிழ் கட்சிகள் ஒன்றாக பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்குப் பல திருத்தங்களைச் சமர்ப்பித்திருந்தது. ஆனால் அவற்றில் ஒன்றாவது பரிசீலனைக்கு எடுக்கப்பட்டதா என்பது முக்கியமான கேள்வியாகும். இத்திருத்தங்களைச் சமர்பித்த 5 தமிழ்க் கட்சிகளில் 2 கட்சிகளின் தலைவர்கள் இப்பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கின்றார்கள். சமர்ப்பித்த திருத்தங்கள் தொடர்பாக இப்பாராளுமன்ற உறுப்பினர்கள் எவ்வளவு அக்கறை செலுத்தியுள்ளார்கள் என்பதும் கேள்விக்குரியதே.

இவை எல்லாவற்றிற்கும் அப்பால் வடகிழக்கு இணைப்பு, பொலீஸ் அதிகாரம், காணிப் பங்கீடு, மாகாணசபைகளைக் கலைத்தல் போன்ற பல விடயங்கள் இன்னும் பேசப்படவே இல்லை. இவை உள்ளூராட்சித் தேர்தல்களின் பின் சிலசமயம் பேசப்படலாம்.

ஆனால் இறுதியாக நடைபெற்ற தெரிவுக்குழு கூட்டத்தில் பேராசிரியர் பீரிஸ் அவர்கள் ஓர் புதிய விடயத்தை அறிமுகப்படுத்தியுள்ளார். அதாவது பிராந்திய சபைகளின் ஆட்சி முறையானது எப்படி இருக்க வேண்டும் என்பது தொடர்பாக ஓர் சட்ட நகலைச் சமர்பித்துள்ளார். இதன் பிரகாரம் பிராந்திய சபைகளுக்கு "Executive Committee System" என்ற டொனமூர் காலத்து முறையினை மீண்டும் அறிமுகப்படுத்தலாம் எனக் கூறியுள்ளார்.

இதன் பிரகாரம் தேர்தலில் போட்டியிடும் சகல கட்சிகளும் அது பெற்றுக்கொள்ளும் பிரதிநிதிகளின் விகிதாசாரத்துக்கிணங்க அமைச்சர் பதவிகளை பெற்றுக்கொள்ளும் என்பதே பொருளாகும். ஒரு கட்சியோ அல்லது சில கட்சிகளின் கூட்டமைப்போ அறுதிப் பெரும்பான்மையை பெற்றுக்கொண்டாலும் கூட, அரசியல் சாசனத்தின் பிரகாரம் ஏனைய கட்சிகள் கணிசமான அளவு ஆசனங்களைப் பெற்றுக்கொண்டால் அவர்களுக்கும் அமைச்சர் பதவி கொடுக்கப்படும் எனக் கூறப்படுகின்றது.

இதனால் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பற்றி தமிழ்க் கட்சிகள் முக்கியமாக பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சிகள் சிந்தித்ததாகத் தெரியவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் கூட Sunday Times என்ற பத்திரிகைக்கு தனது கருத்தைத் தெரிவிக்கையில் இம்முறை சரியென்ற நிலைப்பாட்டில் நிற்பதையே காணக்கூடியதாக உள்ளது.

இதன் பாராதூரத் தன்மையை அறியாத தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் சில கேள்விகளைக் கேட்க விரும்புகின்றோம்:

01. டொனமூர் காலத்தில் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்ட முறையும் அதன் பின்னர் உள்ள முறையும் ஒன்றா?
02. Executive Committee System (நிறைவேற்று அதிகாரக்குழு) சரியானால், அது கைவிடப்பட்டு பின்னர் ஏன் பிரித்தானியாவின் 'வெஸ்ற் மினிஸ்டர்' முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
03. பல்லின, பல மொழி, பல மதங்களைக் கொண்ட, பலகட்சி அரசியல் உள்ள நாட்டில் இந்நடைமுறை சாத்தியமா?
04. எனில், மத்திய அரசில் இதனை நடைமுறைப் படுத்த ஏன் ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் மறுக்கின்றன?
05. இம்முறை நடைமுறைக்கு வந்தால் ஓர் ஸ்திரமான அரசை மாகாண அளவில் அமைக்க முடியுமா?
06. ஒவ்வொரு கட்சி அமைச்சர்களும் ஒவ்வொரு அரசை நடாத்த மாட்டார்களா?
07. முதல் அமைச்சருக்கு ஏனைய அமைச்சர்களின் மேல் கட்டுப்பாடு இருக்குமா?
08. அமைச்சரவையில் ஒருமித்த முடிவுகள் எடுப்பார்களா? பிரச்சினைகள் ஏற்பட்டு அனாவசிய காலதாமதங்கள் ஏற்படாதா?
09. தமக்கு விரும்பிய கட்சிகள் பிராந்தியங்களில் அதிகாரத்தில் இல்லாவிடில் அவர்களை விரட்ட இம்முறைக்குள் நியாயமானளவு இடம் இல்லையா?
10. இப்படியான சூழலில் தீர்வின் பின் ஏற்படப்போகும் பிராந்திய சபை, பகிரப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் சூழ்நிலையில் இருக்குமா?
11. வடகிழக்கை அபிவிருத்தி செய்ய ஒவ்வோர் கட்சியும் தமக்கான கொள்கைகளைக் கொண்டிருக்கலாம். இச்சூழ்நிலையில் எந்தக் கட்சியின் கொள்கையாவது நடைமுறைப்படுத்த முடியுமா?

மேற்கண்ட கேள்விகளுக்குச் சரியான விளக்கங்களை புரிந்து கொள்ளும் எவரும் நிறைவேற்றுக்குழு முறை (Executive Committee System) என்ற தெரிவுக்குழுவின் புதிய ஏற்பாட்டை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆனால் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் இருக்கக்கூடிய தமிழ் உறுப்பினர்கள் இதனை எவ்வளவு தூரம் ஆழமாக ஆராய்கின்றார்கள் என்பதுதான் கேள்விக்குரியது.

வடகிழக்கு இணைக்கப்பட்டு சகல அதிகாரங்களும் வழங்கப்பட்டாலும் கூட, அதனை நடைமுறைப்படுத்துவதற்கான பிராந்திய அரசின் மேற்கண்ட வடிவமானது ஒருநாளும் உதவிகரமாக இருக்காது என்றே ஈ.பி.ஆர்.எல்.எப். நம்புகின்றது. எனவே புதிய விடயங்களை ஓர் பிராந்தியத்திற்கு அறிமுகப்படுத்து முன்னர் இது சரியானதா சிறந்ததா என்பதை மத்திய அரசு தன்மட்டத்தில் நடைமுறைப்படுத்திப் பார்ப்பது சிறந்தது. இனப்பிரச்சினை தீர்விற்கென அரசு முன்வைக்கும் தீர்மானங்கள், அதனைத் தீர்ப்பதற்கு உதவிகரமாக இருக்க வேண்டுமே தவிர, அதனைச் சீர்குலைப்பதாக இருக்கக் கூடாது. தமிழ்க் கட்சிகள் இதனை ஆழமாக ஆராய வேண்டுமென்பதுடன், இந்த நிறைவேற்றுக்குழு முறையை அரசு கைவிட வேண்டும் எனவும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். கோருகின்றது.

# வீசுவதற்கு தம்மிடம் எப்போதும் சேறு வைத்திருப்பவர்கள்

**பெப்.09-15,1997 திகதிய தினமுரசு** இதழில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். யாழ்ப்பாணத்தில் வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரத்தின் இறுதிப் பகுதியான "1990 இலிருந்து ஆயுதங்களற்ற ஓர் முழுமையான ஜனநாயக அரசியல் கட்சியாக ஈ.பி.ஆர்.எல்.எஃப். செயற்பட்டு வருகின்றது" என்பதைக் குறிப்பிட்டுள்ள அப்பத்திரிகை, அதே செய்தியில் யாழ்ப்பாணத்தில் நாம் ஆயுதம் வாங்கி உள்ளோம் என்பதையும் குறிப்பிட்டு எம்மைக் கொச்சைப்படுத்த முயன்றுள்ளது.

இது தொடர்பான விளக்கக் கடிதமொன்றை அப்பத்திரிகைக்கு அனுப்பி அவர்கள் அதைப் பிரசுரிக்காமையால், அதற்கான சிறு விளக்கமொன்றை எமது வாசகர்களுக்கு வழங்க விரும்புகின்றோம்.

1990இல் இருந்து முழுமையான ஓர் ஜனநாயகக் கட்சியாக நாம் செயற்பட்டு வருகின்றோம் என்பதை நாம் மீண்டும் தெளிவுபடுத்த விரும்புகின்றோம்.

1990இல் ஈ.பி.ஆர்.எல்.எஃப்.ஐ அழிக்க தமிழீழ விடுதலைப்புலிகள் இராணுவம், அதிரடிப்படை ஆகியவற்றுடன் இணைந்து கிழக்கில் செயற்பட்டனர்.

பின்னர் புலிகளை அழிப்பதென்ற பெயரில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். தவிர்ந்த ஏனைய தமிழ் கட்சிகள் இராணுவத்துடன் இணைந்து செயற்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணத்தின் தீவுப்பகுதியிலும், வன்னியிலும் பல இயக்கங்கள் இன்னும் இராணுவத்துடன் இணைந்து செயற்பட்டு வருகின்றார்கள்.

இவர்கள் புலிகளைப் பிடித்தார்களோ இல்லையோ குறைந்தபட்சம் தமது இருப்பைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவாவது இதனை ஓர் கருவியாகப் பயன்படுத்தி வருகின்றார்கள்.

ஆனால் ஈ.பி.ஆர்.எல்.எப். எந்த ஒருகால கட்டத்திலும் அரச படைகளுடன் இணைந்து நின்று செயற்பட்டதல்ல என்பதை நாம் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

எமது தலைமைத்துவத் தோழர்களை அழித்து ஆயிரத்திற்கு மேற்பட்ட எமது தோழர்களை புலிகள் கொன்றொழித்தபோதும் நாம்அரச படைகளுடன் இணைந்து செயற்படவில்லை.

மிக நீண்டகாலத்தின் பின் யாழ்ப்பாணத்தில் எமது கட்சி அலுவலகம் ஒன்றைத் திறந்து, அதனூடு எம்மால் இயன்ற பணிகளை மக்களுக்குச் செய்ய வேண்டும், இன்றைய அரசியல் சூழ்நிலை தொடர்பாக மக்களுக்கு விளக்க வேண்டும், அவர்களுடன் கலந்துரையாட வேண்டும் என நாம் முடிவு செய்தோம்.

அதன் பிரகாரம் யாழ்ப்பாணத்தில் ஓர் அலுவலகத்தை திறந்து அதன் பாதுகாப்பிற்காக பொலீசாரைக் கேட்டோம். ஆனால் பாதுகாப்பமைச்சானது, தம்மிடம் போதிய பொலீசார் இல்லை எனவும் எமது அலுவலகத்தை நாமே பாதுகாக்க வேண்டும் எனவும் அதற்கான துப்பாக்கிகளை தாம் தருவதாகவும் கூறினார்கள்.

இதன் பிரகாரம் அலுவலகப் பாதுகாப்புக்கு மாத்திரம் எமக்குத் துப்பாக்கிகள் வழங்கப்பட்டன.

ஆனால் இதனை திரிபுபடுத்தி ஏனைய இயக்கங்களைப்போல இராணுவத்துடன் இணைந்து யுத்தம் புரியவே இதனை எமக்கு வழங்கியது என்ற தோரணையில் 'தினமுரசு' விசமத்தனமான முறையில் செய்தியை வெளியிட்டுள்ளது.

1990இலிருந்து யாழ்ப்பாணத்தின் தீவுப்பகுதிகளில் ஈ.பி.டி.பி. பல சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டது. (அப்பொழுது அங்கு வேறு இயக்கங்களும் இருக்கவில்லை.) அவை எல்லாவற்றையும் பொதுவாக மக்கள் "ஈ.பி." என்றே பேசிக் கொண்டார்கள்.

எனவே தமது சமூக விரோதச் செயல்களை எமது தலைமீது போடுவதற்கான ஓர் முயற்சியாகவே நாம் ஆயுதங்களைப் பெற்றுள்ளோம் எனக் காட்ட முற்படுவதாகத் தோன்றுகின்றது.

ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர் ரமேஷ் நடராசாவால் நடத்தப்படும் இப்பத்திரிகையானது நாசூக்கான முறையில் ஏனைய இயக்கங்கள் தொடர்பான விசமப் பிரச்சாரங்களைச் செய்து வந்துள்ளது.

குறிப்பாக ஈ.பி.ஆர்.எல்.எஃப். இலிருந்து விலக்கப்பட்டவர்களால் ஈ.பி.டி.பி. தொடங்கப்பட்டதாலும், தினமுரசு அவர்களின் பத்திரிகை என்பதாலும், எமக்கெதிராக அவர்கள் அடிக்கடி சேறுவாரி வீசி வருகின்றார்கள் என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

இதேசமயம், வெரித்தாஸ் தமிழ் வானொலியும் எமக்கெதிரான பிரசாரத்தை முடுக்கி விட்டுள்ளது. 'உண்மை' என்ற பெயரில் இயங்கும் இவ்வானொலியின் தமிழ்ச்சேவை பல உண்மைக்கு புறம்பான செய்திகளை வெளியிட்டு வருகின்றது.

அண்மைய செய்தியொன்றில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். துப்பாக்கிகளுடன் இராணுவத்துடன் திரிவதாகவும், யாழ்ப்பாணத்தில் இளைஞர்களை அழைத்து விசாரித்து சித்திரவதை செய்வதாகவும் மிகவும் மோசமான பொய்யொன்றை அவிழ்த்து விட்டுள்ளது. புலிகளின் பொய்யான இப்பிரச்சாரத்தை வெரித்தாஸ் (உண்மை) தனது செய்தியில் தெரிவித்ததானது உண்மைக்கு மாறானதும் வருந்தத்தக்கதுமாகும்.

வடகிழக்கில் எப்பகுதியிலும் நாம் இராணுவத்துடன் இல்லை என்பதுடன் நாம் எந்த இடத்திலும் யாரையும் பிடித்து விசாரித்ததுமில்லை, விசாரிப்பதுமில்லை. அது எமது நடவடிக்கையோ கடமையோ அல்ல.

அப்படியான ஏதாவெதாரு செயற்பாடு எங்காவது நடைபெற்றிருந்தால் வெரித்தாஸ் திட்டவட்டமாக அதனைச் சுட்டிகாட்டட்டும். அதனை விடுத்து, அபாண்டமான குற்றச்சாட்டுக்கள் பழிகளை சுமத்துவதும், பிழையான தகவல்களை மக்களுக்குக் கொடுப்பதும் தொடர்பு சாதனங்களைத் தமது கைகளில் வைத்திருப்போருக்கு அழகல்ல.

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

உங்களிடமிருந்து அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் புதிய கண்ணோட்டம் வரவேற்கிறது. அனுப்ப வேண்டிய முகவரி:

**புதிய கண்ணோட்டம்
த.பெ.இல: 442
கொழும்பு**

புதிய கண்ணோட்டம் தொடர்பான அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:

29A, வாவிக்கரை வீதி-1, மட்டக்களப்பு. ☎ 065-2398

54, மாணிக்கவாசகர் வீதி, திருகோணமலை. ☎ 026-22858

22, வெளிவட்ட வீதி, வவுனியா. ☎ 024-22724

மன்னார். ☎ 023-2370

Post Bag: 1041, Madras-17, India.

B.M.Box: 1738, London-WCIX-3NN, U.K.

E.P.I.C., Box No: 95, 95144, GargesLes, Gonnesse Cedex, France.

P.Fach: 100206, 44002 Dortmund, Germany.

P.Fach: 506, Bern-17, Switzerland.

www.padippakam.com



# இனிய தமிழ் மக்களே!....

## சரியான போராட்ட வழிமுறைகளை இனங்கண்டு நெருக்குவாரங்களை ஏற்படுத்துவதன் மூலம் நிலைமையை மாற்ற நாங்கள் ஒன்று திரள்வோம்!



அன்பிற்கினிய தமிழ் மக்களுக்கு,

அரசாங்கத்தின் தீர்வுயோசனைகளுக்கு, கொஞ்சம் ஓய்வு கொடுத்திருந்தாலும் கூட, அரசாங்கத்தின் இராணுவ முஸ்தீபுகள் இடைவெளி இல்லாமல் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

அண்மையில் 'எடிபல' என பெயரிடப்பட்ட ஓர் இராணுவச் செயற்பாட்டினூடு வவுனியாவில் இருந்து மன்னார் வரையிலான ஓர் தரைப்பாதை திறக்கப்பட்டுள்ளது.

இதுகாலவரை தாழ்வுபாட்டில் இருந்து கடல்மார்க்கமாக கற்பிட்டிக்கு வந்தே மக்கள் அங்கிருந்து ஏனைய இடங்களுக்குப் போகக் கூடியதாக இருந்தது. மிக அதிகளவில் போக்குவரத்துக்குச் செலவழிக்க வேண்டி இருந்தது என்பதுடன், பருவகாலங்களில் கடற்பயணங்கள் முற்றாகவே தடைப்பட்டிருந்தது.

தரைப்பாதை திறந்ததானது நிச்சயமாக மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் விடயமே என்பதில் ஐயமில்லை.

ஆனால், இந்த இராணுவ நடவடிக்கையின்போது, 20,000இற்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாகியுள்ளதுடன் 12,000 ஏக்கர் வயல் நாசமடைந்துமுள்ளது. அருவி வெட்டும் சூழ்நிலையில் இங்கிருந்த மக்கள் அகதிகளாகி வெளியேறியுள்ளனர். இதனால் மாடுகளும், ஆடுகளும் மேயும் தரவையாக இப் பன்னீராயிரம் ஏக்கர் வயலும் மாற்றப்பட்டுள்ளது வருந்தத்தக்கது.

எனவே இராணுவத் தாக்குதல் என்பது ஒருபுறம் தரைப்பாதை திறப்பதால் நன்மையாக இருந்தாலும், மறுபுறம் ஆயிரக்கணக்கான குடும்பங்களை அகதிகளாக்கி, அவர்களின் வயிற்றிலடித்து, அவர்களின் வாழ்க்கையையே கேள்விக்குறியாக்கியுள்ளது.

தேர்தல் பிரச்சாரத்தின் போது ஜனாதிபதியும் அமைச்சர்களும், மன்னாருக்கு தரைப்பாதை திறந்ததைப் பெருமையாகக் குறிப்பிட்டு வாக்குக் கேட்டு வருகின்றார்கள். அதிலும், நீர்கொழும்பு போன்ற கிறிஸ்தவர்கள் வாழும் பகுதிகளில் 'மடு மாதாவிடம் நீங்கள் போக நாங்கள் ஏற்பாடு செய்துள்ளோம், எனவே எமக்கு வாக்களியுங்கள்' என்று பேசி வருகின்றார்கள்.

அதுமாத்திரமல்ல, மாத்தறையில் பேசும்போது, 'இன்னும் 4 வருடம் என்னால் ஆட்சி செய்ய முடியும் – 2 வருடம் யுத்தத்திற்கும் 2 வருடம் அபிவிருத்திக்கும்' என்று ஜனாதிபதி சொல்கின்றார். இன்னொரு கூட்டத்தில், '97இல் யுத்தத்தை முடிப்பேன்' என்கின்றார்.

மொத்தத்தில் யுத்தத்தில் வெற்றி அடைவதன் மூலம் பிரச்சினையை தீர்க்க முடியும் என்ற மாயையிலேயே அரசாங்கம் போய்க்கொண்டிருப்பதாகத் தோன்றுகின்றது.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் சமர்ப்பித்த ஆலோசனைகள் சகல கட்சிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டால், அதனை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்து, மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அதனை நிறைவேற்றலாம் என அரசு ஆலோசித்து வந்தது.

பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி ஒத்துழைக்காவிட்டால் மக்கள் மத்தியில் சர்வஜன வாக்கெடுப்புக்குப் போய் அதன் மூலம் பெரும்பான்மையைப் பெறும் பட்சத்தில், ஐக்கிய தேசியக் கட்சியை பாராளுமன்றத்தில் ஆதரவாக வாக்களிக்க நிர்ப்பந்திக்க முடியும் எனக் கருதியது. இதற்கு முன்னோடியாக உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை நடத்தி அதில் பெரும்பான்மை இடங்களை கைப்பற்ற வேண்டும் எனவும் யோசித்தது.

ஆனால், உள்ளூராட்சித் தேர்தல்கள் ஆளும் கட்சிக்கும் எதிர்க் கட்சிக்குமிடையில் பாரதூரமான விரிசல்களையே ஏற்படுத்தியிருக்கிறது. இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நாலந்த எல்லாவல கொல்லப்பட்டதும், அதனைத் தொடர்ந்து ஏற்பட்டு வரும் நூற்றுக்கணக்கான வன்முறைச் சம்பவங்களும், இரு கட்சிகளுக்கும் இடையிலான பகைமை உணர்வை அதிகரித்தே உள்ளன. தேர்தலின் பின்னர் இது இன்னும் உச்சக்கட்டத்தை அடையலாம் என ஊகிக்கலாம்.

இச் சூழ்நிலையில், ஆளும்கட்சியின் சகல யோசனைகளையும் ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கும் சூழல் ஒன்றே உருவாகும். அது மாத்திரமல்லாமல், அரசு ஓர் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தினால் கூட எதிர்க்கட்சி அம்முடிவைஏற்று பாராளுமன்றத்தில் தீர்வுத் திட்டத்திற்கு ஆதரவளித்து வாக்களிக்க வேண்டுமென்பதல்ல. மாறாக, அதனை முறியடிக்க எதிர்க்கட்சி வேறு திட்டங்களைத் தீட்டும் என்பதே யதார்த்தமானது.

இந்நிலையில் அரசு தொடர்ந்து யுத்தத்தை உக்கிரப்படுத்தி, யுத்தத்தில் வெல்ல முயற்சிக்குமே தவிர அரசியல் தீர்வென்பது கானல் நீராகவே போய்விடும் என்ற சூழ்நிலை தான் தோன்றி வருகின்றது.

இது ஒருபுறமிருக்க, தீர்வுத் திட்டத்தையே சீர்குலைக்கும் ஆலோசனைகளும் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

முக்கியமாக, பிராந்திய சபைகளில் பிரதிநிதித்துவம் பெறும் கட்சிகள் அனைத்திற்கும் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற வேறுபாடின்றி அவர்கள் பெற்ற பிரதிநிதித்துவத்தின் விகிதாசாரத்துக்கேற்ப அமைச்சுப் பொறுப்புக்களை வழங்குவது என்ற ஓர் முடிவையும் தெரிவுக் குழு எடுத்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இது உண்மையில் எதிரெதிர் கருத்துள்ள பலர் சேர்ந்து உருவாக்கும் ஓர் அமைச்சரவையாகவே இருக்கும். இவர்களுக்குள் இழுபறியும் பிடுங்கல்களும், ஒவ்வோர் கட்சியைச் சார்ந்த அமைச்சரும் தனித்தனி அரசாங்கத்தை நடாத்தவுமே இது வழிவகுக்கும். (இது தொடர்பாக ஆசிரியத் தலையங்கத்தில் ஆராயப்பட்டிருக்கிறது.) நிச்சயமாக முழுத் தீர்வுத்திட்டத்தையும் குழப்பும் ஓர் விடயமாகவே இது இருக்கின்றது.

ஆனால், பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழர் விடுதலைக்கூட்டணியும், ஈ.பி.டி.பி., புளொட் போன்ற கட்சிகளும் இதை ஆதரிப்பதாகவே தோன்றுகின்றது. மிகவும் மோசமான இவ்விணைப்பாலோசனை தொடர்பாக தமிழ்க்கட்சிகள் மௌனமாகவே இருந்து வருகின்றன.

தமிழ்க் கட்சிகளைப் பொறுத்தவரை தீர்வாலோசனைகள் தொடர்பாக ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தைக் கொண்டிருப்பதாகவே தோன்றுகின்றது. தமிழர் விடுதலைக்கூட்டணி அரசியலிலும் சட்டத்திலும் மிகவும் பாண்டித்தியமும் புலமையும் பெற்றவர்கள் எனத் தம்மைக் கருதிக் கொள்வதால், அவர்கள் இதுதொடர்பாக ஏனைய கட்சிகளுடன் கலந்தாலோசிப்பதில்லை.

ஆனால் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ் மக்களின் குரல் ஒன்றாக ஒலிக்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈரோஸ், ஈ.பி.டி.பி., ரெலோ, புளொட் போன்றவை அரசின் தீர்வுத்திட்ட ஆலோசனைகள் தொடர்பாக பல திருத்தங்களைக் கூட்டாகச் சமர்ப்பித்தன.

ஆனால் தெரிவுக்குழுவில் இவை ஏற்றுக்கொள்ளப்படுகின்றனவா? இல்லையா? இது தொடர்பாக மாற்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமா? என்பது பற்றிக் கூட இவர்கள் கலந்து பேசுவதில்லை. ஐந்து கட்சிகளின் ஐக்கியம் இவ்வாறுதான் உள்ளது.

தமிழ் மக்களுக்கு ஏற்றதான கௌரவமான அரசியல் தீர்வு ஒன்றை எடுக்க வேண்டும். அதற்காக முழுமையாக நாம் வேலை செய்ய வேண்டும் என்பதிற்குப் பதிலாக, இடைக்கால நிர்வாகம் எனச் சிலரும், எவ்வளவு வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொடுத்து எவ்வளவு பணம் பெறலாம் எனச் சிலரும் அலையும்போது அரசியல் தீர்வு பற்றிக் கவனம் செலுத்த இவ்வரசியல்வாதிகளுக்கு நேரம் எங்கே கிடைக்கப் போகிறது?

சிங்கள முற்போக்கு புத்திஜீவிகளும், அறிஞர்களும் கண்டனம் தெரிவிக்கும் நிலைக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் போயுள்ளார்கள் என்பதனை இங்கு நான் வேதனையுடன் சுட்டிக்காட்ட வேண்டும்.

'தீர்வுத் திட்டத்தையே மோசடிக்குள்ளாக்கும் ஆலோசனைகள் தெரிவுக்குழுவிற்கு வருகின்றன. தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும், தெரிவுக்குழு அங்கத்தவர்களும் என்ன செய்கின்றார்கள்' என சிங்கள நண்பர்கள் கேள்வி கேட்கின்றார்கள்.

எமது பாராளுமன்ற உறுப்பினர்களை எண்ணிச் சிரிப்பதா, அழுவதா அல்லது வெட்கித் தலைகுனிவதா என்று தெரியவில்லை.

அன்பிற்கினிய தமிழ் மக்களே!

ஒருபுறம் இராணுவ தீர்விற்கான முயற்சி, மறுபுறம் தீர்வுத் திட்டமே தோல்வி காணும் நிலைமை.

இந்நிலையில் நாம் வெறும் பார்வையாளர்களாக இருக்கப் போகிறோமா? இல்லையேல் எமதுஉரிமைகளை வென்றெடுக்க சரியான சக்திகளையும், உரிய வழிமுறைகளையும் இனங்கண்டு ஓரணி திரளப் போகின்றோமா? என்பதை முடிவு செய்யும் காலம் நெருங்கிவிட்டது.

ஜனநாயக விரோதச் செயல்களின் மூலம் போராட்டத்தையே சின்னாபின்னப்படுத்தி, உலக ஆதரவையும் இழந்து, இன்று இராணுவரீதியிலும் பலவீனமாகிப் போயுள்ள புலிகள்....

தமிழ் நாட்டிலிருந்து மருத்துவ உதவி செய்பவர்கள் கூட கைது செய்யப்படும் ஓர் சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ள பிரபாகரனின் 'தீர்க்க தரிசனம் மிக்க' தலைமை....

மறுபுறம் தமிழ் மக்கள் எப்பாடுபட்டுப் போனால் என்ன, எம்மிடம் உள்ள ஆயுதங்களைப் பாதுகாக்க வேண்டும், நாம் தனி வழி போக வேண்டும் என நினைக்கும் அரசியல் விற்பன்னர்கள்....

இவற்றுக்கு நடுவில் சொந்த பந்தங்களை இழந்து உற்றார் உறவினர்களை இழந்து, சொத்துப் பத்துக்களை இழந்து உலகமெங்கும் அகதிகளாகியுள்ள எமது மக்கள்....

இவற்றில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டுமாயின், சரியான போராட்ட வழிமுறைகளை இனங்கண்டு இவ்வரசுக்கு நாம் நெருக்குவாரங்களை கொடுக்க வேண்டும். அதற்கான வழிகளில் எமது சிந்தனைகளைச் செலுத்துவோம்.

மீண்டும் மறுமடலில் சந்திக்கும் வரை....

*அன்புடன் உங்கள்,*
*சுரேஷ்*

> "தமிழ் மக்களுக்கு ஏற்றதான கௌரவமான அரசியல் தீர்வு ஒன்றை எடுக்க வேண்டும்; அதற்காக முழுமையாக நாம் வேலை செய்ய வேண்டும் என்பதற்குப் பதிலாக, இடைக்கால நிர்வாகம் எனச் சிலரும், எவ்வளவு வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொடுத்து எவ்வளவு பணம் பெறலாம் எனச் சிலரும் அலையும் போது அரசியல்தீர்வு பற்றிக் கவனம் செலுத்த அவர்களுக்கு நேரம் கிடைக்காதுதான்!"

---

## இனவெறி இசை அரங்கிலிருந்து



1970களின் பிற்பகுதியில் "இனவெறி இசைஅரங்கிலிருந்து" கிளைத்த மொட்டந் தலையர்கள் (Skin Heads) தாம்உருப்பெற்ற இங்லாந்திலிருந்து இன்று பிற மேலை நாடுகளிலும் தமது நச்சு வலையைவிஸ்தரித்துள்ளார்கள். இந்த"ஸகின்ஸ்" இனவெறிக் குண்டர்கள் வெறும் அச்சம் தரும் தோற்றம் கொண்டவர்கள் மட்டும் அல்லர். அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் நடந்த பல இன, நிற வெறிக் கொலைகளுக்குப் பின்னணியில் இந்த வெறியர்களே இருக்கிறார்கள்...... இன்று செக்கோசெலவாக்கியாவின் வொஷிமியாவில் "செக்" குடியரசுக் கட்சியோடு இந்த வெறியர்கள் கூட்டுச் சேர்ந்து இயங்குகிறார்கள்..... 'புறொக்னொஸிஸ்' (செக்.) பத்திரிகையில் பேட்டி: பிரட்டிப்லாவா நகரின் மதுபானச் சாலையில் ஸ்கின்ஸ் குழு வைச் சேர்ந்த ஒருவனை பத்திரிகையாளர் பேட்டி கண்டுள்ளார்:

**பத்:** ஸ்கின்ஸ் என்றால் என்ன? நீங்கள் என்ன செய்கிறீர்கள்?

**ஸ்கின்ஸ்:** அந்நிய அடையாளங்கள் எதுவுமில்லாத ஒரு தூய சமூகத்தைக் கட்டியெழுப்பும் இனக் கருத்தோட்டத்தைக் கொண்ட மக்களின் கூட்டுத்தான் ஸ்கின்ஸ்.... கிரேக்க வெள்ளை இனத் தலைவர் ஜோரியஸ் கொரில் எங்களின் ஒரு இலட்சிய நாயகர்....

**பத்:** உங்களிடம் அதிகாரமும், நிறையப் பணமும் இருக்குமானால் என்ன செய்வீர்கள்?

**ஸ்கின்ஸ்:** மனிதர்களைப் போட்டு எரிப்பதற்கான பெரிய கிடங்கொன்றை அமைப்பேன். இதில் சகல யூதர்களையும், கறுப்பர்களையும், ஜிப்ஸிகளையும் போட்டு எரித்துக் கொல்வேன். வெள்ளையர்கள்தான் உலகை ஆளவேண்டும்.

**பத்:** நாஸிகளின் கருத்துகளுடன் உங்களுக்கு உடன்பாடு உண்டா?

**ஸ்கி:** சில கருத்துகளுடன் உடன்படுகிறோம். ஆரிய இனம் மட்டுமே உலகில் வாழவேண்டும் என்ற கருத்துடன் உடன்பாடு இல்லை. நாகரீகமான தேசங்கள் மட்டுமே உலகில் வாழத் தகுதியுடையவை. மற்றவை அழிந்து போக வேண்டும் என்ற கருத்துடன் உடன்படுகிறோம்..... இந்த உலகத்தில் கறுப்பர்கள் இருக்கும்வரை நாங்களும் ஸ்கின்ஸ் ஆக இருப்போம். இந்த கறுத்த மூடர்களுடன் பேசிப் பயனில்லை. அதனால் இவர்களை அழிக்கும் வரை நான் ஸ்கின்ஸ் ஆக இருப்பேன்.

**பத்:** பொலீஸ் உங்களைப் பற்றி என்ன நினைக்கிறது?

**ஸ்கி:** சில நேரங்களில் அவர்கள் எங்களை அனுசரிக்கிறார்கள். சிலசமயங்களில் எங்களுக்கு கெடுபிடிகள் தருகிறார்கள். பொலீஸின் பணியைத்தான் நாங்கள் செய்கிறோம் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்.

**–மு. நித்தியானந்தன் (நன்றி: தூண்டில்)**

படிப்பகம்

www.padippakam.com



மன்னாரிலிருந்து....




# மன்னார் மாவட்ட மக்கள் தொடரும் சீரழிவுகள்

மன்னார் மாவட்டமானது ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கிய ஒரு நிலப்பரப்பாகும். இதில் மடு, மாந்தை, முசலி, மன்னார்தீவு, நானாட்டான் என்ற பிரதேச செயலாளர் பிரிவுகளைக் கொண்டுள்ளது. இவற்றில் நானாட்டான், முசலி, மடு, மாந்தைப் பிரிவுகள் புலிகளின் கட்டுப்பாட்டிலும் மன்னார்தீவு இராணுவக் கட்டுப்பாட்டிலும் இருந்து வருகின்றன.

மன்னார்தீவுப் பகுதி இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கின்ற போதும், இங்கும் புலிகளின் சிறு சிறு தாக்குதல்கள் நடந்தே வருகின்றது. மன்னார் தீவில் ஆரம்பத்தில் தள்ளாடி வரை இராணுவ முகாம் இருந்தபோதும் புலிகளின் நடமாட்டம் இருந்துகொண்டே வந்தன. தற்போது வவுனியா-மன்னார் நெடுஞ்சாலையைக் கைப்பற்றி, அவ்வீதிகளில் இராணுவம் நிலை கொண்டபோதும் இவ்வீதியின் இரு மருங்குகளிலும் அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளிலும்கூட புலிகளின் ஆதிக்கம் இருந்து வருகின்றன.

பெருமளவிலான மக்களைக் கொண்ட பகுதிகளைப் பிடித்துவிட்டதாக இராணுவம் அறிவித்தபோதும் இங்கு அப்படியான நிலைமை இல்லை. இவர்கள் மன்னார்- வவுனியா வீதியிலேயே நிலைகொண்டுள்ளனர்.



ரெட்ணசிங்கம் குமரேஸ்
பிராந்தியச் செயலாளர், மன்னார்.

மன்னார் தீவில் அன்றாட செயற்பாடுகளுக்காக மக்கள் காலை 9 மணியின் பின்னரே வீதிகளில் நடமாடத் தொடங்குவர். யுத்தத்தின் கொடூரம் மன்னார் தீவையே கதிகலங்க வைத்துள்ளது என்பதனை இங்கு நடமாடும் மக்கள் முகங்களில், இங்குள்ள கட்டிடங்களின் மேனியில், இங்கு ஓடும் வாகனங்களின் அசைவில் காட்சியளித்தபடி இருக்கிறது. மன்னார் நகரம் பின்னேரம் 4 மணியுடன் மூச்சடங்கி விடுவதும் இன்றைய மன்னாரின் நிலையாகும்.

## போக்குவரத்து கஷ்டம் போதுமடா சாமி!

இ.போ.சபையினதும் தனியார் சிலரினதும் குறைந்த எண்ணிக்கையிலான வாகனங்கள் ஓடுகின்ற போதிலும், அனைவரும் நகரை மையமாக வைத்தே தங்கள் சேவையை நடாத்துகின்றனர். மாவட்டத்தின் மற்றைய பகுதிகளில் வாழும் மக்கள் மிகுந்த போக்குவரத்து கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்.

எந்த ஒரு காரியத்தையும் திட்டமிட்டுச் செய்வதற்கு பயணம் மேற்கொள்ள முடியாது. வாகனம் போதியளவு உரிய நேரத்திற்குக் கிடைப்பதில்லை. அப்படி கிடைத்துவிட்டாலும் சோதனைச் சாவடிக் கெடுபிடிகளால் எந்தக் காரியத்தையும் உரிய நேரத்தில் செய்ய முடியாத நிலைமையே இங்குள்ளது.

மன்னார் வாழ் மக்கள் மாவட்டத்திற்கு வெளியே செல்வதற்காக கடல்வழிப் பயணத்தை கற்பிட்டியூடாக மேற்கொண்டனர். ஆனால் இந்நிலைமை இப்போது இல்லாமல் மன்னார்-வவுனியா பாதை திறக்கப்பட்டதன் பின்னர் இந்தத் தரை வழிப் பாதை வழியே பிரயாணத்தை மேற்கொள்கின்ற போதும் பல அசௌகரியங்களை அடைந்தே பயணம் செய்யவேண்டியுள்ளது.

மன்னாரிலிருந்து வவுனியா போக வேண்டிய பிரயாணிகள் முதலில் தங்கள் பெயர்களை மன்னார் கச்சேரியில் இயங்கும் பாஸ் வழங்கும் பிரிவில் பதிவு செய்த பின்னர், பஸ்சில் ஏற்றப்படுகின்றனர். இருமணிநேரம் வரை காக்க வைக்கப்பட்டு பிரயாணம் மேற்கொள்ளப்படுகின்றது. இடைவழியில் சில இடங்களில் இராணுவத்தினர் பிரயாணம் செய்வதற்காக பஸ் காக்க வைக்கப்படுகிறது.

இராணுவம் கைதிகளைப்போல் பிரயாணிகள் அழைத்து வரப்படுகின்றனர். இடைவழியில் பஸ்சினுள் இருப்பவர்கள் தண்ணீர்கூட குடிப்பதற்கு இறங்க முடியாது. வவுனியாவை பஸ் அடைந்ததும் பல அலைக்கழிவுகளுக்கு மத்தியில் பாஸ் வழங்கப்பட்டே விடுவிக்கப்படுகின்றனர்.

சாதாரண சூழ்நிலையில் இரண்டு மணித்தியாலங்கள் வரை எடுக்கும் இப்பயணத்திற்கு ஆறு மணித்தியாலங்கள்வரை எடுக்கின்றது. இதனால் 'வேண்டாம்' என்ற நிலைமையும், பாதை திறந்தும் பயனில்லை என்ற நிலைமையுமே தோன்றுகின்றது.

## பொருட்களின் கிடு கிடு விலை ஏற்றம்

மட்டுப்படுத்தப்பட்ட போக்குவரத்து, புலிகளின் பணப்பறிப்பு, பொருட் பதுக்கல், உற்பத்தித்திறன் இன்மை போன்ற பல காரணங்களால் அத்தியாவசியப் பொருட்கள் பாவனைப் பொருட்கள் போன்ற சகல பொருட்களின் விலையும் அதிகரித்தே விற்கப்படுகின்றது.

இந்நிலைமை பாதை திறக்க முன்னர் இருந்தபோதிலும் பாதை திறக்கப்பட்ட பின்னர் கணிசமான பொருட்கள் தரைவழியாகச் செல்கின்றன. போதியளவு பொருட்கள் மாவட்டத்தை வந்தடைந்தும், பொருட்களின் விலைகளில் எந்தவித மாற்றத்தையும் காணக்கூடியதாக இல்லை.

## கடற்றொழிலும் கட்டுப்பாடுகளும்

மன்னார் மாவட்டத்தின் பிரதான மீன்பிடிக் கிராமங்களான வங்காலை, பள்ளிமுனை, பனங்கட்டிக்கொட்டில், தாழ்வுபாடு, பேசாலை, தலைமன்னார் கிராமம், தலைமன்னார், விடத்தல்தீவு, அரிப்பு, சிலாபத்துறை போன்ற பகுதிகளில் கடற்புலிகளின் போக்குவரத்து இருக்கின்றது எனக் கூறி அரசு, மீனவர்கள் மேல் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. அத்துடன் கடற்தடையும் விதிப்பதுண்டு.

மீனவர்கள் கடலினுள் 2 கிலோமீற்றர் வரையே மீன்பிடிக்கச் செல்ல அனுமதிக்கப்படுகின்றது. இதனால் ஆழ்கடலில் மீன்பிடிப்பை நடாத்துபவர்கள் நிலைமை மோசமாவதுடன் குறிப்பிட்ட தூரத்தில் பெருந்தொகையான மீன் பிடிக்க முடியாமலும் போய்விடுகிறது.

அத்துடன் காலை 7மணிமுதல் மாலை 5மணிவரையே மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இரவு வேளைகளில் மீன்பிடி முற்றாகத் தடைவிதிக்கப்பட்டுள்ளதுடன், சிலநேரங்களில் அதிக நாட்கள் தொடர்ந்தும் போக முடியாமல் தடைவிதிப்பதுண்டு.

இதனால் கடற்றொழிலையே நம்பி வாழும் குடும்பங்கள் கஷ்டப்படுவதுடன் தங்கள் அன்றாட ஜீவனோபாயத்திற்காக அடுத்தவரிடம் கையேந்தும் நிலைமையும் காணப்படுகின்றது.

## விவசாய நிலைமையும் கடன் வில்லங்கங்களும்

விவசாயத்துக்குரிய நிலப்பரப்பைக் கொண்டவையாக நானாட்டான், முசலி, முருங்கன், அடம்பன் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள் காணப்படுகின்றன. இந்த இடங்களிலேயே விவசாயம் செய்கை பண்ணப்படுகின்றது.

இப்பகுதிகளில் அதிகமான இடங்கள் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து வருவதுடன், இங்கு அவர்களின் நிர்வாகமே நடக்கின்றது எனக் கூறலாம். கட்டாய வரிலிலும், இங்கு செய்கை பண்ணப்படும் உற்பத்திப் பொருட்கள், குறிப்பாக நெல் போன்றவற்றைத் தங்களிடமே விற்கவேண்டும் என்றும் புலிகள் விதித்துள்ளனர்.

கொடுக்கும் பொருளுக்குப் பெறுமதியான தொகை கூடப் புலிகள் கொடுப்பதில்லை. சிலவேளைகளில் புலிகளிடம் கொடுத்த நெல்லுக்கான பணத்தொகையைப் பெற முடியாமலும் நீண்டகாலமாக சில விவசாயிகள் திணறுகின்றனர்.

குத்தகைக்காக பணம் கடன் பெற்றும், பசளை கிருமிநாசினி என்பவற்றை வாங்க கடன் பெற்றும் நெல்வயல்களை செய்த விவசாயிகள், பெற்ற கடனை செய்ய முடியாமல் மனமுடைந்த நிலையிலே காணப்படுகின்றனர். இது 1990 இற்குப் பின்னர் தொடர்ந்து நடைபெற்றுவரும் செயலாகும்.

## மீள்கட்டியெழுப்ப முன்வாருங்கள்!

யுத்தத்தின் கோரப்பிடியினால் சிதைந்துபோன பல அரச கட்டிடங்கள், மக்கள் ஒன்றுகூடும் இடங்கள், தனியார் வீட்டுமனைகள் என்பன யாரும் கவனிப்பாரற்ற அனாதைகளாக காட்சியளிக்கின்றன.

இவற்றை மீளக் கட்டியெழுப்புவதற்கும் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்கும் அரசு நடவடிக்கை எடுப்பதுடன், மாவட்டத்தின் அபிவிருத்திக்காக இங்கே உள்ள சமூகப் பெரியோர், அரச அதிகாரிகள், அரசியல் கட்சிகள், அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் ஆகியவை முன்வருவதன் மூலமே சிதைந்து அழிந்துபோன எமது பிரதேசங்களை கட்டியெழுப்ப முடியும். ●

---

# உளறுவாயன்



**உடலின் இதர சக்திகள், சாத்தியக்கூறுகள் ஒடுங்கி, பேச்சு ஒன்றே ஆற்றலின் நிரூபணமாக எஞ்சியுள்ள கிழவர்கள் வலுக்கட்டாயமாக யாராவது நிறுத்தும் வரை சளசளத்துக் கொண்டேதான் இருப்பார்கள். இதுவிஷயத்தில் இவர்களிடமெல்லாம் இரக்கமே கூடாது. மேலும், இவர்கள் குறைவாகப் பேசுவது இவர்களுடைய ஆயுளுக்கும் நல்லதுதானே....!**

**- ஆதவன் (சிறுகதையில்...)**


"உளறுவாயனின் தர்மநியாயங்கள் எல்லாம் சரிதான். ஆனால், அவை சும்மா மேம்போக்காக விஷயங்களை மேய்ந்துவிட்டுச் செல்வதாக இருக்கிறதே தவிர, பிரச்சினைகளின் அடியாழங் கண்டு அலசுவதாக இல்லை" என்று வெளிநாட்டு வாசகர் ஒருவர் குறைப்பட்டு எழுதியிருக்கிறார். நான் என்ன செய்யிறது? ஆழ்ந்து சிந்திச்சால் எனக்கு நித்திரை வந்துவிடுகிறது. இங்கையுள்ள அனேகம் பலரைப்போலவே நானும் வாழ்க்கை வெள்ளத்தில மிதந்து போகிறவன். ஆனபடியால் ஆடு குழை சப்பின மாதிரி அங்கொண்டும் இங்கொண்டுமாய்த்தான் என் உளறல்கள் இருக்கும். மூச்சடக்கிச் சுழியோடி முத்தெடுத்துக் கோர்க்கிற விளையாட்டெல்லாம் அடியேனுக்குச் சரிவராது. என்ர தரத்துக்குக் கொஞ்சம் மேல போய் சீரியஸாய் சிந்திச்சால், அந்த முண்டாசுக்காரன் பாடின மாதிரி "விதியே விதியே தமிழச் சாதியை என்ன செய்யக் கருதி இருக்கிறாய்?" எண்டுதான் புலம்ப முடியுது. மண்ணிலாக் கொட்டை போட்ட நாளாய் மழையுமில்லை, மாமியார் வீட்டுக்குப் போன நாளாய்ச் சோறுமில்லை எண்ட கதையாய் 'தீர்வை' நம்பினவை பாடு திண்டாட்டமாய்க் கிடக்கு. இதுவரை காலமும் இல்லாத விதமாய் தீர்வுத் திட்டமொண்டை வைச்ச முதல் ஆக்கள் நாங்கள்தான் எண்ட திருத்தியோட விஷயம் முடிஞ்சுது எண்டு மூச்சை விட்டிடுவினம் போல கிடக்கு அரசாங்கக்காரர். மற்றப்பக்கம், தேவையான அதிகாரங்களை எடுத்துக் கொண்டு தமிழ் மக்களை நிம்மதியாய் வாழவைக்கிற கெட்டித்தனமும் பக்குவமும் தமிழ்ப் பக்கத்திலையும் மிஸ்ஸிங். ஒரு கன்னை, கடைசியொருத்தர் உயிரோடிருக்கிற வரை அழிக்கிறதும் அழியிறதும்தான் எண்டு கண்மூடித்தனமாய் நிக்கினம். நண்டைச் சுட்டு நரியைக் காவ வைச்ச கதையாய் முடிஞ்சுது அந்தப் போராட்டம்.... மற்றத் தமிழ்க் கட்சியளும் அதே புலிப் பாணியிலேயே, மற்றவையெல்லாம் சிதைஞ்சு கரைஞ்சு போக, தாம் மட்டும் மிஞ்ச வேணும் எண்ட கனவில மேலும் மேலும் ஏலாவாளியளாய்ப் போய்க் கொண்டிருக்கினம் எண்டுதான் எனக்குத் தெரியுது. தற்செயலாய் அரசாங்கம் தீர்வுத் திட்டத்தை அமுல் படுத்த முடிவெடுத்தாலும், அதை வெற்றிகரமாய் நடைமுறைப்படுத்திற தகுதியை உண்டாக்கிக் கொள்ளுறது பற்றித் தமிழ்க் கட்சியள் அக்கறைப்படுறதாய் காணேல்லை. கட்சியளுக்குள்ளையெண்டு மட்டுமில்லாமல், வெளியில உள்ள சிந்தனைத் தெளிவுள்ளவையோடும் ஐக்கியப்பட்டுத் தமிழ்த் தரப்பிற்கான நம்பிக்கையுள்ள தலைமை உருவாகாட்டில் தந்தை செல்வா சொன்னதுபோல் தமிழ் மக்களைக் கடவுள்தான் காப்பாத்தவேணும். ஆள்பிடிக்க வலைவீச்சும், ஏறுப்பாடுகளுமாய் ஒருத்தரையொருத்தர் இல்லாமல் பண்ணிப் போடுறதிலையும், தங்களால மட்டும் தனிச்சு ஏதோ வெட்டிப் புடுங்கிப் போடேலும் எண்ட கனவுகளிலையும்தான் தமிழ்க் கட்சியள் சீரழிஞ்சு கொண்டிருக்கினம். நாட்டின்ரையும் தமிழ் மக்களின்ரையும் இண்டைய நிலைமை, ஒரு பெரிய பள்ளத்தாக்கிலயிருந்து எப்படி வெளியில வாற தெண்டதுதான். தமிழ்க் கட்சியளோ அந்தப் பள்ளத்தாக்குக்குள்ளேயே இருக்கிற சின்னப் புட்டியளில ஏறுறதிலதான் போட்டி போட்டுக் கொண்டிருக்கினம். தத்தம் கட்சியை வளர்த்துக் கொள்ளுகினமாம்! ம்... பள்ளத்தில இருந்து வெளியில வர எல்லோரும் ஒத்தபடி முயற்சிக்க வேணும் ☞

www.padippakam.com



# திருமலை தமிழ் மீனவ சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்






யுத்தச் சூழ்நிலை தொடர்ச்சியாக இருந்துகொண்டிருக்கும் இக் காலகட்டத்தில், திருகோணமலைப் பிரதேசத்தில் தமிழ் மக்கள் தமது அன்றாட ஜீவனோபாயத்திற்குத் தேவையான தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமலும் திண்டாடுகின்றனர். தொழில்களைச் செய்வதில் ஏராளம் நடைமுறைச் சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளனர்.

குறிப்பாக திருகோணமலையில், மக்களிடையே பெருமளவு பணப் புழக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளில் மிக முக்கியமான இடத்தை மீன்பிடித் தொழில் வகிக்கின்றது. எனவே, இத் தொழிலில் ஏற்படுகின்ற நடைமுறைச் சிக்கல்களை நாம் கண்டும் காணதவர்கள்போல் இருக்க முடியாது.

முதலாவதாக, அவசரகாலச் சட்ட விதியின் கீழ் கடல்வலயத் தடைச்சட்டம் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. திருகோணமலை கடற்பரப்பில் வடக்குப் பக்கமாகவோ அன்றித் தெற்குப் பக்கமாகவோ மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லக்கூடாது என்பதுடன், ஓர் நேர்முகப் பாதையிலே அவர்கள் தொழில்களைச் செய்ய வேண்டும் என்பது கடற்படை பொறுப்பதிகாரியின் கட்டளையாகும்.

மீனவர்கள்அதனை ஏற்று நடந்தாலும் கூட பலமுறை பலர் கடற்படையினரால் தாக்கப்பட்டு, சித்திரவதைக்குட்படுத்தப்படுவது மட்டுமல்லாமல், பல மீனவர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணத்தை தழுவியதும் இந்த மக்களுக்குத் தெரியாத. விடயமல்ல.

அநேகமானவர்களுக்குத் தெரியாத, அதாவது இரகசியமாக நடைபெற்று வருகின்ற, தமிழ் மீனவர் சமுதாயத்தை தினம் தினம் வாட்டி வதைக்கின்ற நிகழ்வுகளும் உண்டு.

விவசாயிக்கு எப்படித் தன் சொந்த நிலத்தில் வேறொருவன் வந்து மண்ணைக் கிளறுவது வேதனையைத் தருமோ அதுபோல் மீனவர்களுக்கும் தம் பிரதேசக் கடலை வேறொருவர் வந்து ஆக்கிரமித்துக் கொள்வது மிகுந்த கவலையையே தரும். திருகோணமலையில் இது ஓர் சர்வசாதாரண விடயமாகி விட்டது. உதாரணமாக நீர்கொழும்பு, வென்னப்புவ, கருக்குப்பனை போன்ற பகுதிகளில் இருந்து திருகோணமலைப் பகுதியில் உள்ள நிலாவெளி, இறக்கங்கண்டி, சலப்பையாறு போன்ற பகுதிகளுக்கு 300இற்கு மேற்பட்ட படகுகளுடன் வந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

தமக்கிருக்கும் வசதியைப் பயன்படுத்திக் கொள்ளும் பெரும்பான்மை சமூகத்தினரின் இத்தகைய தான்தோன்றித்தனமான நடவடிக்கைகளால் திருமலை தமிழ் மீனவர் சமுதாயம் பெரிதும் மனோநிலை பாதிப்படைந்து இருப்பதுடன், இந்நடவடிக்கை சம்பந்தமாக நாங்கள் யாருடன் போய் பேசுவது என்ற ஏக்கத்துடன் வாழ்கின்றார்கள்.

இதே நிலைமையில் தென்பகுதியில், குறிப்பாக களுத்துறை, காலி, நீர்கொழும்பு பிரதேசத்தில் இங்குள்ள தமிழ் மீனவர்கள் சென்று தமது தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட, அங்கு வாழும் பெரும்பான்மை சமூகம் ஏற்றுக்கொள்ளாது என்பது வெளிப்படை.

இதுதவிர, 13 குதிரைச் சக்தி கொண்ட மீன்பிடிப் படகு இயந்திரம் யுத்த சூழ்நிலையைக் காரணம் காட்டி வடகிழக்குப் பகுதிகளுக்கு விநியோகம் செய்யக்கூடாதென்பது பாதுகாப்பு அமைச்சின் கண்டிப்பான உத்தரவாக இருக்கிறது. இருந்தும் இங்கு வாழும் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த தனிப்பட்ட பணவசதி படைத்தவர்களுக்கு அந்தத் தடை இல்லை.

தென்பகுதியில் வாழும் மீனவ முதலாளிகளிடமிருந்து அத்தகைய இயந்திரத்தைப் பெற்று அவர்கள் பெரும் லாபத்தையடைந்து கொண்டிருக்கும் வேளையில், தமிழ் சமுதாய மீனவர்கள் மேலும் மேலும் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வருவது கண்கூடு.

1994ம்ஆண்டு ஆட்சிக்கு வந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு, தமிழ் சமூகம் எந்தவகையிலும் பாதிக்கப்படாதவாறு அவர்களுக்கு எமது அரசு சகல சலுகைகளையும் செய்யத் தவறாது என்று பிரசார மேடைகளில் பலதடவை எடுத்துக் கூறினார்கள். ஆனால் இன்று அந்த நிலைமை மாறி வருகின்றது என்பதற்கும் இம் மீனவ சமுதாயமே ஓர் எடுத்துக்காட்டாக இருக்கின்றது.

உதாரணமாக, 1995–96ம் ஆண்டுகளில் தமிழ் மீனவ சமுதாயத்திற்கு எந்தவிதமான சேவைகளும் சமூகநலன்கள் அடிப்படையில் செய்து கொடுக்கப்படவில்லை.

ஆனால் இங்கு வாழும் சிங்கள மீனவர்களுக்கு மானிய அடிப்படையில் மீன்பிடி படகுகள், இயந்திரம், வலை வழங்கப்பட்டு வருகின்றது. அத்துடன் அவர்களுக்கு சிறீமாபுர, விஜித்தபுர போன்ற இடங்களில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

இதைத்தவிர 1981ம் ஆண்டு தமிழ் மீனவர்கள் குடியிருப்புக்கு ஒதுக்கப்பட்ட குடியிருப்புக்காணிகளில் பெரும்பாலானவை இன்று பெரும்பான்மையின மீனவர்களால் பலாத்காரமாகப் பறிக்கப்பட்டுள்ளது. அத்துமீறி அங்கே வீடுகளை அமைத்துக் குடியிருக்கின்றார்கள்.

அப்படியானவர்களுக்குச் சகல வசதிகளும் கிடைக்க வழி செய்யும் இவ்வரசு ஏன் தமிழ் மீனவ சமுதாயத்தைப் புறக்கணித்து நடாத்துகின்றது என்பது ஒட்டுமொத்தமாகத் தமிழ் மக்களிடையே பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

திருகோணமலையில் பிரசித்தி பெற்ற திருத்தலமான கோணேஸ்வரர் ஆலயத்தினை அண்மித்த கரையோரப்பகுதி புனிதபிரதேசமாக கருதப்பட்டு வந்தது. அப்பகுதி இன்று 'கொரியா' என்று பெயரிடப்பட்டு சிங்கள மீனவர்கள் மட்டுமே அவ்விடத்தில் குடியிருப்புப் பகுதிகளை அமைத்து படகுகளை வைத்துத் தொழில் செய்து வருகின்றனர். இப்பகுதியில் அவர்கள் மட்டுமே தொழில் செய்ய முடியும் என்ற கட்டாய நிலை இங்கு உருவாகியுள்ளது.

இப்பகுதிக்கு தமிழ் மீனவர்கள் சென்று மீன்பிடிக்கவோ அன்றி படகுகளை நிறுத்தவோ முடியாது. அதை மீறி படகுகளை நிறுத்தினாலோ மீன்பிடித்தாலோ பொலிசாரால் கைது செய்யப்பட்டு படகுகள் பறிமுதல் செய்யப்படும்.

இது தவிர, வெடிமருந்துகளை உபயோகித்து சிங்கள மீனவர்கள் குறுகிய நேரத்தில் கூடுதலானளவு மீனைப் பிடித்துப் பெருமளவு லாபத்தை ஈட்டிக் கொள்கின்றார்கள். இது இங்குள்ள பாதுகாப்புப் படையினருக்குத் தெரியாத விடயமில்லை. இந்த நடிவடிக்கையைத் தமிழ் மீனவர்கள் செய்தால், வெடி வைத்திருந்தார் என்ற காரணத்தைக்காட்டி பயங்கரவாதி என்ற நாமம் சூட்டி சித்திரவதைக்குட்படுத்திச் சிறையில் அடைத்திருப்பார்கள்.

சுருக்குவலை மீன்பிடித்தல் (டிஸ்கோ வலை) மீன்பிடி அமைச்சினால் தடைசெய்யப்பட்டிருந்தும் இந்த முறை தொழில் நடவடிக்கையை பெரும்பான்மை சமூக மீனவர்களே தொடர்ச்சியாகச் செய்து பெருமளவு இலாபத்தை சம்பாதித்துக் கொள்கிறார்கள்.

இதுபோன்ற நடவடிக்கைகள் பிழையானது என சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அவ்வப்போது எடுத்துக் கூறியும், கையும் மெய்யுமாகப் பிடித்துக் கொடுத்தும், அவ் அதிகாரிகள் ஒருதலைப்பட்சமாகவும் பாராமுகமாகவும் நடந்துகொள்வது தமிழ் மீனவ சமுதாயத்தை பாதிப்படைய வைக்கும் செயலாக அமைகிறது.

அத்துடன் 80க்கும் மேற்பட்ட நவீன வசதிகள் கொண்ட பெரிய படகுகள் (டாங்கி படகு) சிங்கள மீனவர்களுக்கு கொடுக்கப்பட்டிருப்பதும், ஒரு படகுகூட இன்றுவரைக்கும் தமிழ் மீனவர்களுக்கு– ஒருவருக்கு கூட–கொடுக்கவில்லை என்பது தமிழ் சமுதாயத்தின் மீதான மாற்றாந்தாய் மனப்பான்மையின் விளைவென்றே கருதவேண்டியுள்ளது.

எனவே, எதிர்காலத்தில் மேற்குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகள் தொடராமல் இருக்கவும், வெறுமனேயே யுத்த சூழ்நிலையைக் காரணம்காட்டி தமிழ் மீனவ சமுதாயத்திற்கு கிடைக்க வேண்டிய சலுகைகளை கொடுக்காமல், தமிழ் மீனவர் வயிற்றில் அடிப்பதாக இல்லாமல் இன்றைய அரசும் சம்பந்தப்பட்ட அமைச்சின் அதிகாரிகளும் ஏற்றவழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும்.

– க. ரகுநாதன்

---

எண்டதைக் குறுகல் புத்தியில்லாமல் உணர்ந்து கொள்ளுற வரை விமோசனமில்லை. தமிழ் மக்களுக்கு நம்பிக்கையளிக்கக் கூடிய விதத்தில ஒரு தலைமையை உருவாக்காட்டில், சண்டப் பிரசண்டர்களால மக்களும் தேசமும் அழியிறதைத் தடுக்கேலாமல்தான் போகும். என்னமோ எனக்குத் தெரிஞ்சதைச் சொன்னன். கூரையில் ஏறி நிண்டு கொண்டு வானத்தைத் தொடப் போய்க்கொண்டிருக்கிறதாய்க் கனவில இருக்கிறவைக்கு இப்ப விளங்கப்படுத்தேலாது தான். கூரை சரிஞ்சு விழுந்து நாரி முறிஞ்சு கிடக்கேக்கை தான் வைத்தியத்தின்ர தேவை விளங்கும்.

மற்றப் பக்கம், எங்கடை கூட்டணிக்காறர்..! அவை எல்லாரையும் விட வித்தியாசமாம்! பின்னை என்ன? சண்டைபிடிக்கிறவை தொடர்ந்து சண்டை பிடிக்கட்டும், தீர்வைக் கதைக்கிறவை கதைக்கட்டும், அந்தரிக்கிற சனம் அந்தரிக்கட்டும்.... இந்தச் சல்லாரிகளுக்குள்ளையும் கிடைக்கிற நாலைஞ்சு எம்பிப் பதவியளோடை இப்பிடியே போய்க் கொண்டிருப்பம் எண்டது அவையின்ர கணக்கு. நிலைமையில மாற்றம் கீற்றம் வாறதை இந்தப் பெருந்தலையள் விரும்புகினமோ எண்டதே சந்தேகமாய்த்தான் கிடக்கு. பொடியளை துவக்குத் தூக்க உசார்ப்படுத்திப் போட்டு, இப்ப றெக்கோட்டை மாத்தி உருத்திராட்சப் 'போஸ்' குடுக்கிற பெரியவையிட்ட என் விசனம், 'உங்களுக்கு மெழுகுதிரி யாவாரம் நடக்கோணுமெண்டால் பொழுதே விடியக் கூடாதெண்டு நினைக்கலாமோ....' பிறகு சந்திப்பம் வாறன்.

உளறுவாயன்

தர்மநியாயங்கள் யாருக்கு இங்கே புரியப் போகிறது?



---

நாம் பயப்பட வேண்டும் என்றால் எதனுடனுமே தங்களுக்குச் சம்பந்தம் இல்லை என்று சொல்லும் மனிதர்களைக் கண்டுதான் பயப்பட வேண்டும். தன் எதிரி யார் என்று ஒருவன் தீர்மானித்துக் கொள்ள முடியும். அதன்மூலம் அவனிடம் எந்தவிதமான தொடர்பு தேவை என்பதையும் புரிந்துகொள்ள முடியும். எதிரி என்பதால் அவனை நம்ப முடியும். என் எதிரிகளைப் பார்த்து நான் பயப்படவில்லை. ஒரு கொள்கையைத் தங்கள் சொந்தக் கொள்கையாக ஏற்றுக்கொள்ள முடியாமல் தடுமாறும் மனிதர்களைக் கண்டுதான் நான் பயப்படுகிறேன்.

– நிரபராதிகளின் காலம்

படிப்பகம்

www.padippakam.com





# “வெளியிலுள்ள உலகில் கொஞ்சம் அவர்களுக்கும் அனுப்புங்கள்!”

17 வருட யுத்தத்தின் பின்னர் யாழ்ப்பாணம் எப்படி இருக்கிறது? இறுதி 6 ஆண்டுகள் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த யாழ்ப்பாணத்தில் என்ன மாற்றங்கள் நிகழ்ந்தன? ஆக்கபூர்வமாக ஏதாவது நடந்தனவா? இந்த யுத்தத்தின் மூலம் எது மிச்சமாகி இருக்கிறது? இத்தகைய கேள்விகளுக்கு பதில் காண வேண்டியுள்ளது.

யுத்தம் மக்களின் மனநிலையில் கலாசார பொருளாதார வாழ்வில் பாரதூரமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. ‘இடிபாடுகளும் நம்பிக்கை இழந்த மக்களும்’ என்ற நிலையை யாழ்ப்பாணம் அடைந்துள்ளதா? என ஐயுறும் அளவிற்கு நிலைமை மோசமடைந்துள்ளது.

‘எப்படியோ வாழ்ந்து முடிப்போம்’ என்று கருதும் தன்னம்பிக்கை இழந்த மனிதனை எவ்வாறு மாற்றி அமைப்பது? பல்லாயிரம் ஆண்டுகாலமாக இந்தப் பூமியில் கட்டியமைக்கப்பட்ட வாழ்வு சிதைக்கப்பட்டதன் விளைவு, மக்களின் வாழ்வின் சகல அம்சங்களிலும் பிரதிபலிக்கிறது. யுத்தத்துடனும் மரணத்துடனும் வாழ்ந்து முடிப்போம் என்று அவர்கள் தீர்மானித்து விட்டார்கள்.

## ஆறு வருட கால ஆளுகையின் அவலம்

ஆறு வருடங்களாக புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த யாழ்ப்பாணம், சில நூறு யார்களுக்கொரு இராணுவ சேதனைச் சாவடி கொண்ட ஒரு பிரதேசமாகவே இன்று காட்சியளிக்கிறது.

மக்கள் புலிகளில் நம்பிக்கை வைத்திருக்கிறார்களா என்றால்... அதுதானில்லை. அவர்கள் தமது 6 வருட ஆட்சியில் மக்களைச் சக்கையாகப் பிழிந்து விட்டார்கள். மக்களுடைய அசையும், அசையாச் சொத்துக்கள் அனைத்திலும் புலிகளின் பிடி இருந்தது.

இறுதியாக, வலிகாமத்தைவிட்டு வெளியேறிய போதும் அவர்கள் மக்களிடம் பணம் கேட்கத் தவறவில்லை. ஏன் தென்மராட்சியில் இடம்பெயர்ந்தவர்களிடமும் பணம் கேட்டார்கள்.

மக்கள் திரும்பத் திரும்ப இதனைச் சொல்கிறார்கள். தமிழ் மக்களின் விடுதலையின் பெயரால் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களும் யுவதிகளும் மரணித்திருக்கிறார்கள். ஆனால் இத்தனை தியாகங்களும் அர்த்தமற்றுப் போவதற்கான சூழ்நிலை புலிகளாலேயே உருவாக்கப்பட்டதென்பதும் பொது மக்களுக்கு எரிச்சலை ஏற்படுத்தியிருக்கிறது.

## புலிகளின் எச்சம் சிதையுண்ட தேசம்

தவிர, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உருப்படியான தீர்வொன்றை எட்டுவதற்கான சந்தர்ப்பங்களை புத்திபூர்வமாக சாதுரியமாக அணுகுவதற்குப் பதிலாக புறந்தள்ளியதும் மக்களுக்கு எரிச்சலை ஊட்டியது.

**போக்குவரத்து மற்றும் வசதிகள் கடந்த வருடத்தில் இருந்ததை விட பெரிதாக முன்னேறி விடவில்லை.**



எல்லாவற்றிற்கும் மேலாக யாழ்ப்பாண நிலவரம் என்றென்றைக்குமாகத் தொடர்ந்து பேணப்படும் என்ற எதிர்பார்ப்பை உருவாக்கி விட்டு, எடுத்த எடுப்பில் ஒரு சில மணிநேரத்தில் வலிகாமத்தை விட்டு வெளியேறக் கோரியதும் மக்களுக்கு ஜீரணிக்க முடியாததாக இருந்தது.

இதற்காகவா இவ்வளவு உயிரிழப்புக்களைச் சந்தித்தோம்...?

இதற்காகவா பணத்தையும் பொருளையும் வாரிவாரி இறைத்தோம்...?

இதற்காகவா சகலவிதமான உள்ளூர் அடக்குமுறைகளையும் சந்தித்தோம்...?

என்று பல்வேறு விதமான கேள்விகள் மக்கள் மத்தியில் உருவாகின.

ஏனெனில் ஏறத்தாழ அன்றாட வாழ்க்கையை, புலிகள் பல தசாப் தங்களுக்கு பின்தள்ளி இருந்தார்கள். எல்லாவிதமான மனித ஆற்றலும் யுத்தத்திற்கு என்றவாறு அவர்கள் எல்லாவற்றையும் மாற்றி இருந்தார்கள்.

ஆனால் இறுதியில் சிதையுண்ட ஆக்கிரமிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தை அல்லவா மிஞ்ச வைத்துள்ளார்கள்.

யாழ்ப்பாணத்தின் ஆற்றல் வாய்ந்த மனித வளத்தில் ஒருபகுதி மரணத்தைத் தழுவிவிட்டது. இன்னொரு பகுதி பிற இடங்களுக்குச் சென்றுவிட்டது.

பாதுகாப்புக் காரணங்களுக்காக செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்ட, தனது வழமையான ஆற்றல்களில் இழப்பைச் சந்தித்த ஒரு சமுதாயமாக அது தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் எஞ்சி நிற்கிறது.

## பிள்ளைகளைத் தேடி அலையும் பெற்றோர்

சூரியக்கதிர் நடவடிக்கைகளின் போது கைது செய்யப்பட்டவர்கள், காணாமல் போனவர்கள் தொடர்பான கேள்விகள் கேள்வியாகவே இருக்கின்றன. பதில்தான் இல்லை.

கடந்த 6ம் 7ம் மாதங்களில் கைதுசெய்யப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் (ஏறத்தாழ அனைவரும்) எங்கென்று தெரியாத துரதிருஷ்ட நிலையே நிலவுகிறது. 8ம் 9ம் மாதங்களில் கைது செய்யப்பட்டவர்களில் சிலர் கொழும்பு மகசீன் சிறைச்சாலையில் இருப்பதாக அறியமுடிகிறது. தவிர இன்னும் சிலர் அனுராதபுரச் சிறைகளில் வைக்கப்பட்டிருப்பதாக அறியமுடிகிறது. இன்னுமொரு பகுதியினர் காங்கேசன்துறை பொலிசில் வைக்கப்பட்டிருப்பதாகவும் கருதப்படுகிறது.

வீரவில, பண்டாரவளை முகாம்களிலும் இவர்களில் பலர் வைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இவர்களைப் பற்றி திட்டவட்டமான பட்டியல் எதுவும் அரசினால் வெளியிடப்படவில்லை.

தமது பிள்ளைகள் உற்றார் உறவினர்கள் எங்கிருக்கிறார்கள்? அவர்கள் இருக்கிறார்களா இல்லையா? எனத் தெரியாமல் பெற்றாரும் உறவினர்களும் அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் யாழ் நகரிலுள்ள இராணுவ முகாம், பொலிஸ் நிலையங்களுக்கு நாளாந்தம் சென்று வருகின்றனர். இன்னுமொரு பகுதியினர் கொழும்பிலும் வவுனியாவிலும் தமது பிள்ளைகளைத் தேடி அலைகிறார்கள்.

## எங்கே என்றாவது தெரியப்படுத்துக

ஆனால் அரசினால் உருவாக்கப்பட்ட மனித உரிமை ஆணைக் குழுவிடமோ, வேறு அமைப்புக்களிடமோ, சிறைகளிலோ, பொலிஸ் நிலையங்களிலோ அல்லது இராணுவ முகாம்களிலோ இருப்பவர்கள் பற்றி எந்த விபரங்களும் இல்லை. இந்த விபரங்கள் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

தவிர, நாளாந்தம் காணாமல் போனவர்கள் பற்றி பொதுமக்கள் புதிதாக யாழ்ப்பாணம் சென்றிருக்கும் தமிழ்க் கட்சிகளிடமும் முறைப்பாடு செய்கிறார்கள். தமிழ்க் கட்சிகளும் இவர்களைத் தேடி அலைந்த வண்ணம் உள்ளனர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இற்கு மாத்திரம் 60இற்கு மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. தொடர்ந்து முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன. கட்சிகளின் காரியாலயங்கள் வைத்தியசாலை வெளிநோயாளர் பகுதிபோல் மக்களால் நிரம்பி வழிகின்றது.

பல்வேறு தரப்பினரதும் நெருக்குவாரத்தினால், பாதுகாப்பமைச்சினால் நியமிக்கப்பட்டவர்கள் யாழ்ப்பாணத்தில் 50 வரையிலான முறைப்பாடுகளை விசாரித்தார்கள். ஆனால் உண்மையில் சுதந்திரமான விசாரணைகள் மேற்கொள்ளப்படுவது அவசியம்.

## துன்பங்களைக் கடக்க துரித அக்கறை எங்கே

புனர்வாழ்வு புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படுவதாகஅரசு அறிவித்திருந்தாலும் உண்மையில்

**புனர்வாழ்வு புனரமைப்பு பணிகள் நடப்பதாக அரசு அறிவித்திருந்தாலும் உண்மையில் மிக மிக மந்தகதியிலேயே அவை மேற்கொள்ளப்படுகின்றன.**



மிக மிக மந்தகதியிலேயே அவை மேற்கொள்ளப்படுகின்றன. மக்கள் மீள்குடியேறுவதற்கான பணம் என 500ரூபா வழங்கப்படுவதாக அரசு அறிவித்தது. ஆனால் அது எல்லோருக்கும் வழங்கப்படவில்லை. சுமார் 50 ஆயிரம் பேருக்கு இது வரை வழங்கப்பட்டதாக அறியப்படுகிறது. ஆனால் அதுகூட சீரான முறையில் வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை.

## கவனிக்க வேண்டிய கஷ்ட நிலவரங்கள்

சிதைந்த பாடசாலைகள், மக்களின் குடிமனைகள் அப்படி அப்படியே இருக்கின்றன. பாதைகள் எவையும் செப்பனிடப்பட்டதாகத் தெரியவில்லை. பல கோவில்களில் பூசைகள் எதுவும் நடைபெறாமல் பாழடைந்து கிடக்கின்றன. நிர்வாகத்தில் ஊழல் தலைவிரித்தாடுகிறது. இவை சீர்திருத்தப்படாமல் புனர்வாழ்வு புனரமைப்பு என்பது பகல் கனவே.

விவசாயிகளுக்கு வழங்கப்படும் அமோனியம் சல்பேற்று உரம் மண் கலந்தே விநியோகிக்கப்படுகிறது. ஆனால் அதில் ஒருபகுதி கறுப்புச் சந்தைக்குச் சென்றுவிடுகிறது. விவசாயம் செய்யாத முன்னாள் விவசாயிகள் அதனைவாங்கி தனியாருக்கு விற்று விடுகிறார்கள்.

பெரும்பாலான போக்குவரத்து சாதனங்கள் தற்போதும் மண்ணெண்ணெய்யிலேயே இயங்குகின்றன. ஆனால் போக்குவரத்து, இறைப்புக் கூலிகள், கடந்த 6 வருடங்களில் இருந்ததைவிட பெரிதாகக் குறைந்துவிடவில்லை.

அனுமதி அட்டை உள்ள வாகனச் சொந்தக்காரர்களுக்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மண்ணெண்ணை 13.50 சதத்திற்கு விநியோகிக்கப்படுகிறது. வெளியில் மண்ணெண்ணை 25ரூபாவிற்கு விற்கப்படுகிறது.

விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் படிப்படியாக சீர்கேடுகளைத் தவிர்த்து இயங்கத் தொடங்குகின்றன. செம்மண் பிரதேசத்தில் தீவிரமான விவசாய ஈடுபாட்டைக் காணக்கூடியதாக இருக்கிறது.

கடல்வலயக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படமுடியாத யதார்த்த சூழ்நிலை இருப்பினும், மீன்பிடி உபகரணங்கள் தட்டுப்பாடு, கடலில் பாதுகாப்பின்மை போன்ற பிரச்சினைகள் நிலவுகின்றன. இப்போதுதான் மீனவர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். மன்னாரிலிருந்து படகுகளில் தப்பி வந்தவர்களில் பெரும்பாலானவர்கள் மீனவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மீனவர்கள் வலை, வள்ளம், பாதுகாப்புக் கெடுபிடிகள் என பல பிரச்சினைகளை எதிர்நோக்குகிறார்கள். வரையறுக்கப்பட்ட இடத்தினுள்தான் மீன்பிடிக்க முடியும் என்ற நிலையும் சந்தைப்படுத்துவதிலுள்ள சிக்கல்களும் மீன்பிடித் தொழிலை நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளது.

ஆனால் மீனவர்கள் தமது சங்கங்களை புனரமைத்து வருகின்றனர்.

## அறிவுத் தேவைக்கும் அங்கே எதுவுமில்லை

பாடசாலைகளில் 2 லட்சம் மாணவர்கள் தங்கியிருந்த இடத்தில் 90,000 மாணவர்களே கல்வி கற்கிறார்கள். ஆனால் அப்பியாசப் புத்தகங்கள், மற்றும் பாடசாலை அத்தியாவசிய உபகரணங்களுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகிறது. ஆசிரியர் பற்றாக்குறையும் பொது அறிவுக்கான நூல்களுக்கு பலத்த தட்டுப்பாடும் நிலவுகிறது. அறிவுத் தாகத்தைப் பூர்த்தி செய்வதற்கான நூல்கள் இல்லை.

உதயன் பத்திரிகையைத் தவிர வாசிப்பதற்கு பெருவாரியான மக்களுக்கு எதுவும் இல்லை. ஒரு வெற்றிடம் நிலவுகிறது. லேக்ஹவுஸ் பத்திரிகைகள், வீரகேசரி, தினமுரசு போன்றவை அங்கு சென்றாலும் மிக வரையறுக்கப்பட்டளவு பத்திரிகைகளே செல்கின்றன.

அங்கு பல்வேறு மாற்றுக் கருத்துக்களும் இடம்பெறும் பத்திரிகை ☞

www.padippakam.com



கள் மற்றும் தொடர்புச்சாதனங்கள் தேவை. கடந்த 6 வருடங்களாக ஒரேவிதமான பத்திரிகையைப் பார்த்தார்கள், ஒரேவிதமான கருத்துக்களைக் கேட்டிருக்கிறார்கள். மாற்று எதுவும் இல்லை. பல்வேறு தரப்பு செய்திகள் விடயங்களை அறிய முடியவில்லை.

'நங்கை' என்றொரு மாதர் இதழ் மாதந்தோறும் வெளிவருகிறது. 'தூண்டி' என்ற பெயரில் புதிதாக ஒரு மாதர் சஞ்சிகை வெளிவர ஆரம்பித்திருக்கிறது. ஈ.பி.ஆர்.எல்.எஃப். இன் மாதாந்த பத்திரிகையும் விநியோகிக்கப்படுகிறது.

## முடமாகிப் போன கலாசார வாழ்வு

கடந்த 6 வருடங்களாக பல்கலைக்கழகம் சமூக விவகாரங்களில் ஈடுபடுவது தடுக்கப்பட்டிருந்தது. இன்றும் யாழ் பல்கலைக்கழகம் தனது சமூக ஈடுபாட்டிற்கான செயற்பாட்டில் இறங்கவில்லை.

நாட்டின் இன்றைய நடப்புக்கள் பற்றிய பல்வேறுவிதமான கருத்தரங்குகள் அங்கு நடத்தப்பட வேண்டும்; கலை இலக்கிய விழாக்கள் நடத்தப்பட வேண்டும்; ஆரோக்கியமான திரைப்படங்கள் காண்பிக்கப்பட வேண்டும்.

சில கருத்தரங்குகள், புத்தக வெளியீட்டு விழாக்கள் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியிலும் நடாத்தப்படுகின்றன. சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் பின்னர் 6,7 நூல்கள் வெளிவந்துள்ளன.

எல்லாவற்றிற்கும் மேலாக அங்கு சுதந்திரமான மனித உரிமை அமைப்புக்கள், ஜனநாயக நிறுவனங்களின் செயற்பாடு அவசியம். அவை அரசியல் கட்சிகள், இராணுவம் சாராததாக இருக்க வேண்டும்.

## என் அப்பாவின் சடலம் கூடவா எனக்குக் கிடையாது?



யுத்தம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதால் பாரபட்சமில்லாமல் செய்திகள் வெளிவருவதற்கு பத்திரிகைகள் – பத்திரிகையாளர்களின் சுதந்திரமான செயற்பாடு அவசியம்.

## நடந்துலவ முடியாமல் நானூறு தடைச் சாவடி

சில நூறு யார்களுக்கு ஒன்றாக அமைந்திருக்கும் சோதனைச் சாவடிகளில் இறங்கி நடந்து செல்வதென்பது மக்களுக்கு பல்வேறு விதமான சங்கடங்களை உருவாக்குகிறதென்பது உண்மையே.

பெண்கள் சில வேளைகளில் நீண்ட நேர தாமதங்களைச் சந்திக்கிறார்கள். இராணுவத்தினருக்கு எம்மவர்களில் சிலர் சொல்லிக் கொடுத்திருக்கும் தமிழும் ஒரு பிரச்சினை. சில இடங்களில் பெரிய மனிதர்களைப் பார்த்து 'எங்கே போகிறாய்?' 'இறங்கு', 'போ', 'வா', போன்ற வார்த்தைகள் சங்கடங்களை ஏற்படுத்துகின்றன. ஆனால், அவர்கள் யாழ் நகரத்தில் மக்களுடன் ஓரளவு கண்ணியமாகவே -நடந்து கொள்கிறார்கள் என்பது உண்மையே.

தொலைதூரக் கிராமங்களில் தனிமையான இடங்களில் சிலவேளைகளில் பிரச்சினைகள் அதிகமாக இருக்கின்றன. இக்காரணங்களுக்காகத்தான் பல்வேறு விதமான ஸ்தாபனங்களும் அங்கு செயற்பட வேண்டுமென்கிறோம்.

## மாண்ட உடலையும் பெற முடியாத மனைவி மக்கள்

பாதுகாப்பு அரணுக்கு வெளியில் செயற்படும் புலிகள் இராணுவத்தினருக்கு கண்ணிவெடி வைத்துஅல்லது கைக்குண்டை வீசி ஆத்திரமூட்டலை ஏற்படுத்தி, அதன்மூலம் ஏற்படும் சாதாரண அப்பாவி மக்களின் இரத்தத்தில் குளிர்காய நினைக்கிறார்கள் என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும்.



ரி. சிறீதரன்

ஆனால், இறந்து போனவர்களின் உடலை – புலிகளாக இருக்கலாம் இல்லாமலும் இருக்கலாம் – அவர்களின் உடல்களை அவர்களின் மனைவி பிள்ளைகளிடம் ஒப்படைக்காமல் விடுவதுதான் கொடுமையானது.

இத்தகைய ஒரு சம்பவம் தாவடியில் நடந்தது. இரண்டு புலி இயக்கத்தவர்கள் இறந்தார்கள். அவர்கள் இறந்த நேரத்தில் இன்னுமொரு உள்ளூர்வாசியும் இறந்தார் (42வயது). ஆனால் அவருடைய உடல் அந்த ஏழை மனைவியினாலோ 4–10 வயதுக்கிடையிலான பிள்ளைகளாலோ பெற முடியவில்லை. மரணித்த தனது கணவனுக்கோ, தமது தந்தையாருக்கோ இறுதிச் சடங்கு நடாத்த அனுமதியளிக்கப்படவில்லை.

'எனது அப்பா யுத்தத்தில் செத்துப் போனார்' என்ற தேசிய சமாதானப் பேரவையின், முட்கம்பி வேலிக்குப் பின்னால் நிற்கும் சிறுமியின் முகம் ஒரு யதார்த்தமாக மீண்டும் ஒருமுறை நம் மனத்திரையில் நிழலாடுகிறது.

## மழையில் நனைந்து வெய்யிலில் காய்ந்து...

புலிகள் என்ன காரணங்களைச் சொல்லி வலிகாமத்தை விட்டு மக்களைத் தென்மராட்சிக்கு அழைத்துச் சென்றார்கள்...? மக்களின் உயிருக்கு ஆபத்து நேரும் என்றுதானே? ஆனால் அவர்கள் தற்போது அணைக்கட்டுக்கு அப்பால் மக்கள் செறிந்துவாழும் இடங்களில் குண்டுகளை வெடிக்கவைக்கிறார்கள்.

கசிப்பு, களவு இரண்டும் யாழ்ப்பாணத்தில் தலைவிரித்தாடுகின்றன. முன்னர் இவை இருக்கவில்லை என்று சிலர் கூறக்கூடும். அண்மையில்தான் இவை உருவாக்கப்பட்டன. ஏனென்றால் அவர்கள் வலிகாமம் இடம்பெயர்வின் போது மக்களின் வீடுகளைச் சூறையாடினார்கள். எனவே அண்டை அயலாரின் பொருட்களை அபகரித்துச் செல்வது தவறில்லை என்ற விபரீதமான போக்கு நிலவுகிறது.

தவிர, தொழிலின்மை, வறுமையின் நிமித்தம் மற்றவர்களின் பொருட்களை விற்பதும் இருக்கிறது. இதற்கென்றே திருடர் கூட்டம் குழுக்குழுவாக இயங்குகிறது. பட்டப்பகலில் ஓடு கழற்றி விற்பவர்கள், மதில் இடிக்கப்பட்டவுடன் அதனை லொறியில் ஏற்றிச்சென்று விற்பவர்கள் இருக்கிறார்கள்.

மிக மோசமாகப் பாதிக்கப்பட்டவை முஸ்லீம் மக்களின் சொத்துக்கள்தான். இப்போதும் அவர்களின் வீடுகளில் மரம் தடிகள் எல்லாமே பிடுங்கப்படுகின்றன.

புலிகள் யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேறும்போது, தம்மால் எடுத்துக்கொண்டு போகமுடியாமல் போன பள்ளிவாசல்களில் இருந்த முஸ்லீம் மக்களின் பொருட்களை அடித்து நொறுக்கி நிர்த்தூளி பண்ணிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். முஸ்லீம்கள் பாதுகாப்பிற்காகவே பள்ளிவாசல்களில் வைத்துச் சென்றார்கள். புனித குர் ஆன் மழையில் நனைந்து வெய்யிலில் காய்கிறது.

தமிழ் சமுதாயத்தின் ஆன்மா மாத்திரமல்ல முஸ்லீம் சமூகத்தின் ஆன்மா எவ்வாறு நொறுக்கப்பட்டிருக்கிறது, எவ்வாறு மதிக்கப்பட்டிருக்கிறது என்பதற்கான குறியீட்டுக் காட்சிகள் அங்கு மனம் துணுக்குறக் காணப்படுகின்றன.

## துயரங்கள் வரைந்த வயதான உடல்கள்



மொத்தத்தில் நொறுங்கிப்போன வாழ்வு. ஆனால் மெதுமெதுவாக உயிர்ப்பு நடக்கவே செய்கிறது. கடந்த ஒரு மாதத்தில் யாழ் நகரில் சனசந்தடி அதிகமாக இருக்கின்றது. ஒவ்வொன்றாக கடைகள் திறக்கப்படுகின்றன. விவசாயம், மீன்பிடித் தொழில்களில் சாடைமாடையான களை தெரிகிறது. மாணவர்கள் பாடசாலைகளுக்கு சிட்டாகப் பறக்கிறார்கள்.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## யாழ்ப்பாணத்தில் செய்யப்பட வேண்டியவை என்ன?

யாழ் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டப்பட வேண்டும். அவர்கள் நிராதரவு நிலை அடைந்துவிட்டது போன்ற தோற்றப்பாடு நிலவுகிறது.

எப்படியோ இந்தச் சூழலில் வாழ்ந்து முடிப்போம் என்ற நிலை நிலவுகிறது. காலை 6 மணியிலிருந்து மாலை 7 மணிக்கு இடையே அவர்கள் இயங்குகிறார்கள். பின்னர் அவர்கள் வீடுகளுக்குள் முடங்க வேண்டிய நிலை. எந்தவிதமான பொழுதுபோக்கு அம்சங்களும் இல்லை. இருளை வெறித்தபடி அவர்கள் முடங்கி விடுகிறார்கள்.

அங்குள்ள அரசியல் வெற்றிடம் காத்திரமான முறையில் நிரப்பப்பட வேண்டும். ஜனநாயக விரோத அரசியல், மக்களின் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை தடைசெய்துள்ளது. மக்கள் சுதந்திரமாக பேசுவதற்குரிய நாள் உருவாக்கப்பட வேண்டும். சரிபிழைகளை, தமது கருத்துக்களை சுய ஆளுமையுடன் செய்வதற்கான சுதந்திரம் தேவை.

அதேபோல் அவர்கள் வாசிப்பதற்கு, எழுதுவதற்கான சாதனங்களின் செயற்பாடு அவசியம். உதயன் பத்திரிகை, உள்ளூர் சர்வதேச ஒலிபரப்புச் சேவைகளைத் தவிர வேறெதுவும் அவர்களை எட்டுவது அருமையில் அருமை.

நாடளாவிய அளவிலும் சர்வதேச அளவிலும் நடக்கும் நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகள் அவர்களைச் சென்றடைய வசதி செய்யப்பட வேண்டும். தமிழ்த் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக என்ன கருத்துக்கள் நிலவுகின்றன என்பதும் அவர்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

நாளாந்த வாழ்வை நிம்மதியாக ஒப்பேற்றுவதற்கு குறைந்தபட்ச அடிப்படைகளையாவது உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

விவசாயம், மீன்பிடி போன்ற தொழில்களில் அவர்கள் எதிர்நோக்கும் கெடுபிடிகள் பரிவுடன் அணுகப்பட்டுத் தீர்வுகாணப்பட வேண்டும்.

சோதனைச் சாவடிகள் அவசியமானவை என்றாலும் கூட சோதனைச் சாவடிகளில் சாத்தியமான அளவு சிரமங்கள் குறைக்கப்பட வேண்டும்.

வைத்தியசாலைகள் புனரமைக்கப்பட வேண்டும். போதியளவு வைத்தியர்கள் கடமையிலீடுபடுத்தப்பட வேண்டும். அத்தியாவசிய மருந்துகள் தடையின்றிக் கிடைப்பதற்கு வசதி செய்யப்பட வேண்டும்.

பாடசாலைகள் புனரமைக்கப்படுவதுடன், மாணவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். பாடசாலை அப்பியாசக் கொப்பிகள் உட்பட அத்தியாவசிய தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டும்.

ஆசிரியர் பற்றாக்குறை. தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்படுவதும், புதிதாக ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதும் அவசியம்.

விவசாயிகளுக்கான உரம், கிருமிநாசினிகள், எரிபொருள் என்பன இலகுவாகக் கிடைப்பதற்கும், உரம் கிருமிநாசினிகள் ஆகியவை மானிய விலையிலும் கிடைக்கச் செய்யப்பட வேண்டும்.

விவசாய உற்பத்திப் பொருள்களான உபஉணவுப் பொருட்கள் மற்றும் பழவகைகள் யாழ்ப்பாணத்திலிருந்து பிற இடங்களுக்கு ஏற்றுமதி செய்வதற்கான நிலைமைகள் தோற்றுவிக்கப்பட வேண்டும்.

மீன்பிடிப்பவர்களுக்கான கடல் எல்லை விஸ்தரிப்பு, பாதுகாப்பு என்பவற்றுக்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மீன்பிடி உபகரணங்கள் மானிய விலையிலோ கடன் அடிப்படையிலோ கிடைப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட வேண்டும்.

அரசு மீளக் குடியமர்வுக்கென வழங்குவதாக வாக்குறுதியளித்த 5000ரூபா இடம்பெயர்ந்த குடும்பங்கள் அத்தனைக்கும் வழங்கியாக வேண்டும்.

யாழ் நூல்நிலையம் புனரமைக்கப்பட இருப்பதாக கதைகள் அடிபடுகின்றனவே தவிர அங்கொன்றுமில்லை. யாழ் நூலகம் புனரமைக்கப்படுவதுடன் ஏனைய நகரசபை பிரதேச சபைகளுக்குள் வரும் நூல்நிலையங்கள் வாசிகசாலைகள் புனரமைக்கப்பட வேண்டும்.

உள்ளூர் போக்குவரத்து வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டும். வீதிகள் செப்பனிடப்பட வேண்டும். யாழ் பஸ்நிலையம் ஏனைய பஸ் நிலையங்கள் புனரமைக்கப்பட வேண்டும்.

யுத்தத்தினால் சிதையுண்ட பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை, அச்சுவேலி கைத்தொழில் பேட்டை என்பன மீள் நிர்மாணிக்கப்பட வேண்டும்.

யாழ்குடாநாடு முழுவதும் மின்சார வசதி ஏற்படுத்த முயற்சிகள் துரிதகதியில் மேற்கொள்ள வேண்டும்.

தொலைத் தொடர்பு வசதிகள் சீர்செய்யப்பட வேண்டும். மூடுண்ட தனிமைப்பட்ட நிலையில் இருப்பதால் இது மிக மிக அவசியம். உற்றார்கள் சிதறுண்ட நிலையில் இது மிக மேலதிக முக்கியத்துவம் பெறுகிறது. தபால் பட்டுவாடாவும் அவ்வாறே.

சுகாதார சேவைகளுக்கான வாகன வசதி, தாதிகள் பயிற்சி மற்றும் மருத்துவ வசதிகள் பயிற்சிகளுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தொழிற்பயிற்சி நிலையங்கள் உருவாக்கப்பட வேண்டும். தொழில்நுட்ப கல்லூரி இயங்கும் நிலைக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

நீர்வழங்கல் வடிகாலமைப்புகள் சீர்செய்யப்பட வேண்டும். என்றுமில்லாதஅளவிற்கு நுளம்புத் தொல்லைகள் அதிகரித்துள்ளன. அதனால் ஏற்படும் நோய்களும் அதிகரித்துள்ளது.

இரவில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருப்பதால் அவசர தேவைகளுக்காக ஆஸ்பத்திரிக்கு வருபவர்களின் சிரமங்களைக் குறைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தொழில் துறைகள் நாசமாக்கப்பட்டதால் இளைஞர் யுவதிகளின் வேலை இல்லாப் பிரச்சினை பூதாகாரமாக உருவெடுத்துள்ளது. தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட வேண்டும்.

பாரிய சேதத்தை அடைந்த சாலைகள், அரச கட்டிடங்கள், குடிமனைகள் சீர்செய்வதற்குரிய உதவி வழங்கப்பட வேண்டும்.

வெளிநாடுகளிலுள்ள பிள்ளைகள், உறவினர்களிடமிருந்து பணத்தை நேரடியாக யாழ்ப்பாணத்தில் பெறுவதற்கான ஒழுங்குகள் வேண்டும்.

அவசர வேலைகள், வேறு அத்தியாவசிய காரியங்கள் நிமித்தம் வேறிடங்களுக்கு செல்பவர்களுக்கான பிரயாணங்களில் இருக்கக்கூடிய அநாவசிய தாமதங்கள் இழுத்தடிப்புக்கள் தவிர்க்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

பெண்கள் சுதந்திரமாக அச்சமின்றி நடமாடக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்.

கிராமங்களில் உள்ள ஏழை எளிய மக்கள் கோல உடை தரித்தோரினால் இம்சிக்கப்படுவதும் அவமானப்படுத்தப்படுவதும் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

ஊழலில் ஈடுபடும் உயர் அதிகாரிகள் தயவு தாட்சணியமின்றித் தண்டிக்கப்பட வேண்டும்.

நவீன உலகின் கணனி இயந்திரங்கள் யாழ்ப்பாணத்திலும் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

வான்முட்டும் விலைவாசிகள் மட்டுப்படுத்தப்பட வேண்டும். நாட்டின் ஏனைய பகுதிகளுடன் சமநிலைக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் பயணம் செய்பவர்களிடம் அறவிடும் பணத்திற்குத் தக்க சேவைகள் வழங்கப்படுவதில்லை. பணமும் அதிக தொகையே வாங்கப்படுகிறது. கப்பலுக்கு ரூபா 750. விமானத்திற்கு ரூபா 3228. ஆனால் சிறியவர் பெரியவர்களுக்கிடையில் வித்தியாசமில்லை. யாழ்ப்பாண விமான நிலையத்தில் இறக்கப்படும் பயணிகள் ட்ரக்கில் ஏற்றப்பட்டே பஸ் நிலையத்திற்கு அழைத்து வரப்படுகிறார்கள். இத்தகைய அசௌகரியங்கள் தவிர்க்கப்பட வேண்டும்.

சிவில் காரியாலயத்தில் பிரயாணங்களுக்கு விண்ணப்பிப்பதற்கு நிற்கும் மக்கள் நீண்ட கியூ வரிசையில் மணிக்கணக்கில் தவமிருக்கிறார்கள். இதில் சிவில் காரியாலய ஊழியர்கள் அதிகரிக்கப்பட்டு துரிதமாக காரியங்கள் முடிக்கப்பட வேண்டும்.

பரீட்சை நிமித்தம், உள்நாட்டுவெளிநாட்டு வேலை நிமித்தம், மரணச்சடங்கு வைத்திய காரணங்களுக் காக செல்பவர்களுக்கு முன்னுரிமை வேண்டும்.

இவ்வாறு எண்ணற்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும். ஆனால் யுத்தமும் அபிவிருத்தியும் ஒன்றையொன்று நிராகரிப்பவை.

எனவே யுத்தத்திற்கு முடிவுகட்டுவதும் தமிழ் மக்களின் இவ்வளவுகால இழப்பையும் ஈடுசெய்யும் வகையில் தீர்வொன்றை அடைவதும் இன்றைய வரலாற்று அவசியம்.

இந்தவிதமான நடவடிக்கைகளுக்காக எமக்கு உதவக்கூடிய வெளிச் சக்திகள் உதவியுடன் சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்குமுன் தமிழ் அரசியல், ஜனநாயக, மனித உரிமை சக்திகள் தமக்குள் உடன்பாட்டுக்கு வரவேண்டும்.

மக்கள் பீதியின்நிழலிலிருந்து விலகுவதற்கு கோல உடை தரித்த இறுகிய முகமும் விறைத்த துப்பாக்கியும் என்ற சூழல் மாற்றப்பட வேண்டும். இவை எல்லாவற்றையும் உடனடியாக செய்யமுடியாவிட்டாலும் படிப்படியாகச் செய்தாக வேண்டும். ஆனால் தாமதிக்க முடியாது.

தமிழ்ச் சமுதாயம் அழிவின் விளிம்பில் நிறுத்தப்பட்டிருக்கிறது. தற்போது துரிதமாகச் செயற்படாவிட்டால் விழிப்படையாவிட்டால் நாளைய சந்ததி நாம் விட்ட தவறுக்காக என்றென்றைக்கும் எம்மை சபிக்கும். ஜனநாயகத்தை சீரமைப்பது என்பது பழைய வாழ்க்கையை மீட்பது மாத்திரமல்ல. அதனைச் செழுமைப் படுத்துவதுமாகும்.

படிப்பகம்

www.padippakam.com



## பிராந்திய சபைகளுக்கு நிறைவேற்று அதிகாரக் குழு முறை

# தெரிவுக்குழுவின் கேலிக்கூத்து

தமிழ் தேசிய இனப்பிரச்சினை தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக் குழுவானது, தனது கடந்தஅமர்வின்போது, பிராந்திய சபைகளுக்கு நிறைவேற்று அதிகாரமுள்ள குழு (Executive Commetee) என்ற அரசியல் அமைப்பை அறிமுகப்படுத்தலாம் எனக் கருத்துத் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக சட்ட மா அதிபரும் ஓர் நகல் வரைவைத் தெரிவுக்குழுவுக்குச் சமர்பித்துள்ளதாகவும் அறியப்படுகின்றது.

பிரேரிக்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளின் பிரகாரம், பிராந்திய சபைத் தேர்தல்களில் போட்டியிட்ட கட்சிகள் பெற்ற வாக்குகளின் விகிதாசாரத்துக்கு ஏற்ப, உறுப்பினர் எண்ணிக்கையும் அமைச்சர்களின் எண்ணிக்கையும், அக் கட்சிகளுக்குப் பகிர்ந்து கொள்ளப்படும்.

போட்டியிட்ட ஒவ்வோர் கட்சியும் எத்தனை உறுப்பினர்களையும், எத்தனை அமைச்சர்களையும் பெறுவார் என்பதைத் தேர்தல் ஆணையாளர் அறிவிப்பார்.

சிறந்த ஜனநாயகத் தன்மை கொண்ட அரசியல் அமைப்பு முறை என்ற பேரால், பெரும்பான்மைக்குச் சிறுபான்மை கட்டுப்பட வேண்டும் என்ற நியாயமான ஜனநாயகத் தன்மையை, கேலிக்குரியதாக்கும் நடைமுறையையே பாராளுமன்றத் தெரிவுக்குழு தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியால் முன்வைக்கப்பட்ட நடைமுறைக்கொவ்வாத ஆலோசனைகளை ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கும் பாராளுமன்றத் தமிழ்க் கட்சிகளும் ஏற்றுக்கொள்ளுள்ளதானது, தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கு நிலையான தீர்வொன்றைக் காண்பதில் இவர்களுக்குள்ள அக்கறையின்மையையும் அலட்சியப் போக்கையுமே காட்டுகின்றது.

மேலும், பிராந்திய சபையில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்று முதல்வராகப் பொறுப்பேற்பவர் தன்னுடன் ஒத்துழைக்கக்கூடிய அமைச்சு நிர்வாகங்களை ஆற்றலுடன் கவனிக்கக்கூடிய உறுப்பினர்களைத் தனது விருப்பத்தின் அடிப்படையில் அமைச்சராக்க முடியாது. ஏனெனில், வெவ்வேறு கட்சிகள் தாம் விரும்பியவர்களையே அமைச்சராக்கும்படி முதலமைச்சரை வற்புறுத்தும்.

தனது கட்சி அறுதிப் பெரும்பான்மை பெற்றிருந்தாலும் கூட முதலமைச்சர், மற்றைய கட்சி உறுப்பினர்களுக்கும் அமைச்சுப் பொறுப்புக்களை கொடுப்பதற்கு அரசியல் சாசன ரீதியாகவே நிர்ப்பந்திக்கப்படுகிறார்.

அதாவது வழக்கமான நடைமுறையில், ஒரு கட்சியில் இருந்தோ அல்லது ஓர் கூட்டணியில் இருந்தோ அமைச்சர்களை நியமித்துச் செயற்படுவதற்கு மாறாக, முதலமைச்சர் பல்வேறுபட்ட கட்சிகளைச் சேர்ந்த அமைச்சர்களையும் தன்னுடன் இணைத்துக் கொள்ள நிர்ப்பந்திக்கப்படுவார். எனவே இங்கு கொள்கை முரண்பாடு, கட்சி மோதல்கள் கொண்ட செயற்திறனற்ற ஓர் அமைச்சரவையே உருவாகும்.

இவ்வாறு ஆளும் தரப்பு, எதிர்தரப்பு கட்சிகளைச் சேர்ந்த அமைச்சர்கள் அமைச்சரவையில் இருக்கப்போவதால், அமைச்சரவை இரகசியத்தைக் காப்பாற்றுவது என்பது அறவே அற்றுப் போய்விடும். அமைச்சரவைச் சண்டைகள் தொடர்ந்து தொடர்பு சாதனங்களை ஆக்கிரமித்துக்கொள்ளும். இவை ஆளும் கட்சியை மேலும் மேலும் பலவீனமாக்கிவிடும்.

அமைச்சரவைக் கூட்டுப் பொறுப்பு என்பதும் இம்முறையில் சாத்தியமற்றதாகி விடும். அறுதிப் பெரும்பான்மையைப் பெற்று முதலமைச்சரைத் தெரிவு செய்த கட்சி கூட தனது பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்த முடியாமல் போய்விடும்.

ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் நேரெதிர்க் கொள்கையைக் கொண்டிருக்கும் பட்சத்தில் எதிர்க் கட்சியில் இருந்து வரக்கூடிய அமைச்சரானவர், ஆளும் கட்சியினது கொள்கைகளை நடைமுறைப்படுத்தாமல் தனது கொள்கையையே நடைமுறைப்படுத்த முயற்சிக்கலாம்.

இதனால் தேவையற்ற இழுபறிகளும் காலதாமதங்களும் நெருக்கடிகளும் ஏற்படுமே தவிர, மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதையும், அபிவிருத்தியையும் எதிர்பார்க்க முடியாது. மக்கள், ஆட்சி மீது அவநம்பிக்கை கொள்வர். நாணயமான அரசியல் தலைவர்களும் மதிப்பிழந்து கேலிக்குரியவராக்கப்படுவர்.

இச் சூழ்நிலையே எல்லாப் பிராந்திய சபைகளிலும் ஏற்படும் என்பதால், இம்முறை மக்களால் நிராகரிக்கப்பட்டுத் தோல்வியைத் தழுவும். இன்னொரு வகையில் சொல்லப் போனால் தமிழ் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வாக வைக்கப்பட்ட இம்முறையும் தோல்வியைத் தழுவும். இதனால் மீண்டும் பிரச்சினைகளும் போராட்டங்களும் ஏற்படவே வழிவகுக்கும்.

பலகட்சி ஜனநாயக முறை என்பது மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக பல்வேறுபட்ட புரிந்துணர்வுகளையும், தீர்வுகளையும், அவற்றைச் செயற்படுத்தும் ஆற்றலையும் கொண்ட கட்சியை மக்கள் தெரிவு செய்ய வாய்ப்பளிப்பதேயாகும்.

தற்போது பிரேரிக்கப்பட்ட இந்த முறையின்படி எந்தக் கட்சியின் கொள்கையையேனும் பெரும்பான்மை மக்கள் ஆதரித்து வாக்களித்தாலும் கூட, அக்கட்சி ஆட்சியமைத்து அக்கொள்கைகளை நடைமுறைப்படுத்தாத சூழ்நிலையையே ஏற்படுத்தும்.

அமைச்சர்கள் நியமனம் செய்யப்படுவது சட்ட ரீதியானவை என்பதால் அவர்களை மாற்றுவதாக இருந்தாலும் கூட, அக்கட்சியில் இருந்தே இன்னொருவரை நியமிப்பது என்ற நிலைக்கு முதலமைச்சர் நிர்ப்பந்திக்கப்படுவார்.

இவ்வாறான சூழ்நிலை என்பது ஒவ்வோர் அமைச்சரும் தான் தோன்றித்தனமாக நடக்கவும், போட்டிகள் ஏற்படவும் வழிவகுப்பதுடன் பிராந்திய சபையில் ஒவ்வோர் அரசியல் கட்சியும் ஒவ்வோர் அரசாங்கத்தை நடாத்த முற்படுவர்.

இம்முறையானது முதல்வரது அதிகாரத்தையும் பதவியையும் கொச்சைப்படுத்தும் ஓர் முறையாகவே தெரிகின்றது.

மேலும் மேற்படி ஆலோசனையானது தெரிவுக்குழுவில் விவாதிக்கப்பட்டபோது, அமைச்சர்களாக்கப்படும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு வலுவான அமைச்சுக்களையே வழங்க வேண்டும் என்பதையும் சட்டபூர்வமாக்க வேண்டும் எனவும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டதாம்.

இதிலிருந்து இவர்கள் ஜனநாயகம் என்பதை எவ்வளவு தூரத்திற்கு கேலிக்குரியதாக்க முற்படுகின்றார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

மேற்படி பிரேரிக்கப்பட்ட அரசியலமைப்பு முறையானது, மிகச் சிறந்த ஜனநாயகச் செயற்பாடு என பெரும்பான்மைக் கட்சிகள் கூறிக்கொள்கின்றனர். அது உண்மையாயின் முதற்கட்டமாக இத்திட்டத்தை கொழும்பில் இருக்கும் மத்திய அரசு தனது அமைச்சரவையில், நடைமுறைப்படுத்தி ஒட்டுமொத்த இலங்கையிலும் ஜனநாயகம் தழைக்கப் பாடுபடலாமே!

ஏன் மத்திய அரசுக்கு ஓர் நடைமுறையும் பிராந்திய சபைகளுக்கு வேறு நடைமுறையையும் உருவாக்க முற்படுகின்றனர்?

உண்மையில், ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கு என ஓர் சுயாட்சி அமைப்பு உருவாகுவதில் ஆளும் பொதுஜன முன்னணி அரசுக்கும் சரி, எதிர்க்கட்சியாகிய ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சரி, அக்கறையில்லை என்பதையே மேற்படி ஆலோசனை தெளிவாகக் காட்டுகின்றது.

இப்படியான குழப்பகரமான ஓர் பிராந்திய சபையையும், அமைச்சரவையையும் அதிகபட்ச ஜனநாயகம் என்ற போர்வையில் தெரிவுக் குழுவில் பேசப்பட்டபோது, அதில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சிகளான தமிழர் விடுதலைக்கூட்டணி, புளொட், ஈ.பி.டி.பி. போன்றவை தமது குறைந்தபட்ச எதிர்ப்பைக் கூட காட்டாது இருப்பது என்பது தமிழ் மக்களது 15 வருடகால துயரம் செறிந்த போராட்டத்தை கொச்சைப்படுத்துவதாகவே அமைந்துள்ளது என ஈ.பி.ஆர்.எல்.எஃப். கருதுகின்றது.

இனப்பிரச்சினைக்கான அரசின் தீர்வுத்திட்டமானது இவ்வாறான செயற்பாடுகளால் கேலிக்குரியதாக்கப்படுவதை ஈ.பி.ஆர்.எல்.எப். கண்டிப்பதுடன், நிறைவேற்று அதிகாரம் கொண்ட குழுக்கள் என்ற (Executive Commetee) முறையை நீக்க வேண்டும் எனவும் கோருகின்றது. ●

# வெளியில் உள்ள உலகில் கொஞ்சம்...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் வயதுவந்த மனிதர்களின் முகங்களில் எதையோ பறிகொடுத்த சோகம் நிலவுகிறது. கடினமான வாழ்க்கையின் அறிகுறிகள் அவர்கள் உடலிலும் தெரிகிறது.

சரியான போக்குவரத்து வசதிகள் இல்லாததால் பல்வேறு சுமைகளையும் சுமக்கக்கூடிய வடிவங்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் மாற்றப்பட்டுள்ளன.



மக்களுடன் சம்பந்தமில்லாத போராட்டம், மக்களை அந்நியப்படுத்திய போராட்டம், மக்களை ஏவல் செய்பவர்களாக மாற்றிய போராட்டம் இன்று இத்தகைய பாரதூரமான பிரச்சினைகளை உருவாக்கி உள்ளது.

வைத்தியசாலைகளில் பற்றாக்குறை நிலவுகிறது. சில மருந்துகள் பாதுகாப்பமைச்சின் அனுமதி பெற்றே வந்து சேர வேண்டும். ஆகக் குறைந்த விலையில் மருந்துப் பொருட்களை மக்கள் பெறக்கூடியதாக இருக்கிறது. இருக்கும் ஒருசிலர் மிகுந்த அர்ப்பண உணர்வுடன் வேலை செய்கிறார்கள்.

'ரிவிரச'விற்குப் பின் சிலருக்கு யாழ்ப்பாணம் வேண்டாத நகரமாகி விட்டது. ஆனால் இவ்வளவு நெருக்குவாரங்களின் மத்தியிலும் கடமையாற்றும் மருத்துவர்களை. சுகாதார சேவை ஊழியர்களை பாராட்டாமல் இருக்க முடியாது. அவர்களிடமும் முன்னேற்றத்திற்காக விழையும் ஆர்வம் தெரிகிறது.

## சமூக மனிதர்களும் தவிச்ச முயலடிப்பவர்களும்

பல்கலைக்கழகம் – ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. அதுவும் ஆசிரியர்களை எதிர்பார்க்கிறது. வைத்தியக் கல்லூரி மாணவர்கள் தம் முயற்சியால் சில விரிவுரையாளர்களைக் கொண்டுவந்து சேர்த்துள்ளார்கள். ஆனால் போதாது.

என்ன கெடுபிடிகள் நிகழ்ந்தாலும், நாம் அங்கு சேவை செய்ய வேண்டும் என முன்நின்று செயற்படும் எமது ஊழியர்களை, பாடசாலை ஆசிரியர்களை, டொக்டர்களை, பல்கலைக்கழக ஆசிரியர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இவர்களின் தியாகங்கள் அளப்பரியன. இவர்களால்தான் அந்த சமூகம் விழித்தெழுகிறது. அங்கு இருந்த 6 வருடமும் சொகுசாக இருந்துவிட்டு கொழும்பு வந்திருந்து அல்லது வெளிநாடுகளுக்குச் சென்று பிளந்துகட்டுபவர்களல்ல அவர்கள்.

எமது சமூகம், நாளை தலை நிமிர்ந்து நிற்பதற்கும் போராடுவதற்கும் இத்தகைய மனிதர்கள் தேவை. எல்லோரும் கைவிட்டுச் சென்ற பிறகு இவர்கள்தான் நின்றார்கள்.

ஆனால் தவித்த முயலடித்த கதையாக மக்களின் பொருட்கள் நிதி ஆதாரங்களைச் சூறையாடும் எமகாதகர்கள் மிக முக்கியமான பதவிகளில் இருந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் மாற்றப்பட வேண்டும். யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு முக்கியமான அதிகாரி பற்றி எவருமே நல்ல அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை.

மின்சாரம் யாழ் நகரத்தில் சில குறிப்பிட்ட இடங்களுக்கு ஜெனரேட்டர்கள் மூலம் வழங்கப்படுகிறது. அதுவும் மூன்று 60W மின் குமிழ்கள்தான் பாவிக்கலாம் என்று மின்சார சபையினர் சொல்கின்றனர். ஆனால் எம்மவர்களில் சிலர் சலவை யந்திரங்களையும், மின்சார அடுப்புகளையும் கூட பாவிக்கிறார்கள். இடைக்கிடை ஜெனரேட்டர் பழுதாகிவிடும். மின்சாரம் தடைப்படும்.

பெரிய பற்றறிகள் பெற முடியும், சிறிய பற்றறிகள் பெறமுடியாது, அல்லது கூடியவிலையில். கிராமங்களில் சைக்கிள் டைனமோவில் வானொலி கேட்ட காலம் முடிவடைந்துவிட்டதென்னவோ உண்மைதான்

## தொலைபேசியும் தொல்லைப் பயணமும்

தொலைத் தொடர்புத் திணைக்களத்தால் வேம்படி மகளிர் கல்லூரிக்கண்மையில் அமைக்கப் பட்டுள்ள தொலைத் தொடர்பு நிலையத்தில் நாளாந்தம் மக்கள் கூட்டம் நிரம்பி வழிகின்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து வேறு இடங்களுக்கு தொடர்புகொள்ள தனது வரிசை வரும்வரை 2, 3 நாட்கள் வரை காவல் இருக்க வேண்டும்.

இதேபோல் ஆஸ்பத்திரி வீதியில் இருக்கும் தனியார் தொலைபேசிச் சேவை நிலையத்திலும்.

இன்னும் 6 மாதத்தினுள் தொலைபேசிச் சேவை ஓரளவு சீராகி விடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கப்பல், விமானப் பயணங்களுக்கான விண்ணப்பங்களைப் பெற்று கொழும்பு, திருமலை, வவுனியா போன்ற இடங்களுக்குச் செல்ல வேண்டியவர்கள் நூற்றுக்கணக்கில் காவல் நிற்கின்றார்கள். அவர்களுக்கு உடனடியாக அனுமதி கிடைத்துவிடும் என்றில்லை.

ஆனால் கப்பல் பயணம் முன்னரை விட சீக்கிரமாகக் கிடைக்கிறது. கப்பல் கட்டணம் 750ரூபா. மக்களுக்கு விசனத்தை ஏற்படுத்துகிறது. கப்பல் பயணத்திற்கு 2, 3 வாரங்களில் அனுமதி கிடைக்கிறது. அதுவும் தமது பிரதேசத்திலுள்ள உயர் இராணுவ அதிகாரியின் அனுமதியைப் பெற்று சிவில் நிர்வாக அலுவலகத்தில் சமர்ப்பித்தே பெறலாம். தகுந்த காரணம் இருக்க வேண்டும்.

## இன்றைய சூழல் வெறும் சூரியக்கதிர் விளைவல்ல

உள்ளூர் போக்குவரத்து ஓரளவு நகர்கிறது. 25 வரையிலான பஸ்கள் ஓடுகின்றன.

ஏன் நாளாந்த பிரச்சினைகள் பற்றிப் பிரஸ்தாபிக்கிறோம் என யாரும் கேட்கலாம். ஆம், இந்த அற்ப அலுவல்களுக்காக மக்கள் நன்றியுள்ளவர்களாக இருக்குமளவிற்கு நிலைமை சீரழிந்துள்ளது.

ஒரு தொலைபேசித் தொடர்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக,

ஒரு பயணத்திற்கான அனுமதியைப் பெற்றுக்கொடுப்பதற்காக,

காணாமல் போன பிள்ளைகள் இருக்குமிடம் அறிந்து சொல்லுவதற்காக....

இந்தளவு அரசியல் உணர்வற்ற சூழல் வெறும் சூரியக்கதிர் நடிவடிக்கையினால் மாத்திரம் எற்படுத்தப்படவில்லை. மக்களுடன் சம்பந்தமில்லாத போராட்டம், மக்களை அந்நியப்படுத்திய போராட்டம், மக்களை ஏவல் செய்பவர்களாக மாற்றிய போராட்டம் இன்று இத்தகைய பாரதூரமான பிரச்சினைகளை உருவாக்கி உள்ளது.

ஆனால் விழிப்புணர்ச்சியை மீண்டும் ஏற்படுத்த சிறு பொறிகள் போதும். வழமையான முறையிலிருந்து பெரிதாக விலக முடியாத நிலையிலிருக்கும் 'உதயன்' பத்திரிகையைத் தவிர வாசிப்பதற்கெதுவுமில்லை. அது மாத்திரம் தான் உலகை அறிவதற்கு பெருவாரியான மக்களுக்குள்ள ஒரே சமாதானம்.

அங்கு பல்வேறு பத்திரிகைகள் வெளியிடுவதும், பல கலந்துரையாடல்கள் நடாத்தப்படுவதும், பல்வேறு சமூக அக்கறை கொண்ட ஸ்தாபனங்களின் இன்றைய அவசரத் தேவை. அங்கு சகல தரப்பிலும் நிலவும் பிரச்சினைகள், மக்கள் அவலங்களை உடனுக்குடன் வெளிக்கொணரவும் அது அவசியம். ●

படிப்பகம்

www.padippakam.com



**ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி**

**EELAM PEOPLE'S REVOLUTIONARY LIBERATION FRONT**

பத்திரிகைகளுக்கு அறிக்கை

வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இராஜா குகனேஸ்வரன் ஈ.பி.ஆர்.எல்.எப். இன் அனைத்து உறுப்பு நிலைகளிலிருந்தும் வெளியேற்றப்பட்டார். ஈ.பி.ஆர்.எல்.எப். தொடர்பான எந்த நடவடிக்கைக்காகவும் அவருடன் தொடர்பு கொள்ள வேண்டாமென பொதுமக்களை ஈ.பி.ஆர்.எல்.எப். கேட்டுக் கொள்கிறது.

அவர் கட்சியுடன் தீர்த்துக் கொள்ள வேண்டிய கணக்கு வழக்குகள் ஏராளம். ஆனால் அவர் தொடர்ச்சியாக கட்சியின் பெயருக்கு களங்கம் விளைவித்து வருகிறார். எனவே சகிக்கமுடியாத நிலவரத்திலேயே அவர் வெளியேற்றப்படுகிறார். அவரது நடவடிக்கைகள் கட்சியின் வளர்ச்சிக்கும், மக்கள் வேலைகளுக்கும் தடையை ஏற்படுத்துவதாகவே அமைந்துள்ளது. அத்தோடு கட்சியின் வளங்களை தானும் தனது குடும்பத்தினரும் அனுபவிப்பது என்றவாறு செயற்பட்டதாலேயே அவரை வெளியேற்ற வேண்டிய நிலை எமக்கு ஏற்பட்டது.

அவரை வெளியேற்றுவதற்கு முன் அவருடைய பாரதூரமான தவறுகள், கட்சிக்கும் மக்களுக்கும் துரோகமிழைக்கும் செயற்பாடுகள் சுட்டிக்காட்டப்பட்டன. விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால் பிரச்சினைகள் அதிகரித்தனவே தவிர குறையவில்லை.

எமது கட்சியினூடாகவே அவர் பாராளுமன்ற உறுப்பினராக அறிமுகப்படுத்தப்பட்டார். ஆனால், தான் பெற்றுக்கொண்ட அந்தஸ்தை தனது தனிப்பட்ட நலன்களுக்காக துஷ்பிரயோகம் செய்தார். இவருடைய இத்தகைய செயற்பாட்டை நாங்கள் நீண்டகாலம் சகித்தோம். திருந்தவில்லை. வெளியேற்றுவது தவிர்க்க முடியாததாகியது.

# குறுக்கெழுத்துப் போட்டி-31

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | 5 | | 6 | |
| | ■ | 7 | | | ■ | | ■ | ■ | |
| 8 | | | | ■ | 9 | | 10 | ■ | |
| | ■ | | ■ | 11 | | | | | |
| 12 | 13 | | 14 | ■ | | ■ | | ■ | ■ |
| ■ | 15 | | | 16 | ■ | 17 | | | 18 |
| 19 | | ■ | 20 | | 21 | | | ■ | |
| 22 | | 23 | | ■ | 24 | | ■ | 25 | |
| 26 | | | ■ | 27 | | | 28 | | ■ |
| | ■ | 29 | | | | ■ | 30 | | |

## இடமிருந்து வலம்

1. வவுனியா–மன்னார் பாதையைத் திறப்பதற்கு இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கை.
4. சமீபத்தில் திருமணமான நேரு குடும்ப வாரிசு; பிரியதர்ஷினியின் பேத்தி.
7. வாகனங்களின் பாதம்; வன்முறையாளர் ஆட்சியில் உயிருடன் மனித உடல் எரித்த மாலைகள்.
8. எளிமையான நளினம்.
9. துர்வாச முனியின் பிரசித்த குணம்.
11. பலரும் அறிந்துகொள்ளச் செய்யப்படுவது.... இதற்குத்தான் வெளிச்சம் வேண்டும் வெளிச்சத்திற்கு ஏன் இது?
12. மனதை ஒருநிலைப்படுத்தி அமைதிகொள்ள ஏற்பட்ட இடம். இங்கே குழம்பியிருக்கிறது.
15. முடிகொண்ட மன்னரும் கடைசியில் ஒருபிடி ---- ஆவர் என்பதுதானே உண்மை.
17. இது தின்னக் கூலியும் தரவேண்டுமா?
19. ஒருவர் மனதை ஒருவர் அறிய இணைக்கும் பாலம் இது. கடைசி எழுத்தில்லை.
20. வட இந்தியாவில் பிரதானமான ஒரு உணவுப் பண்டம். (குழம்பி)
22. அழுத்தித் தேய்த்தல்.
24. விளையாட்டுப் பொருளுக்கு முதலெழுத்தில்லை.
25. மூக்கு இருக்கும் வரை இதுவும் இருந்துதானே தீரும்.
26. வாசனைத் திரவியம் ஒன்றின் முதலெழுத்தைக் காணோம்.
27. சரஸ்வதி.
29. நடைதளர்ந்தால் தேவைப்படும் மூன்றாவது கால்.
30. தேவைக்கு ஏற்ப இதுவும் அதிகரிக்கும். புதுசு என்றால் அதற்குக் கொஞ்சம் இது உண்டுதான்.

## மேலிருந்து கீழ்

1. தேர்தல் தகராறென்றால் தடியால் கல்லால் அடித்துக் கொண்ட காலம் போய் இப்போது சுட்டுக் கொள்ளும் காலம். எதிர்க்கட்சிக்கு வினையாக முடிந்த கொலை.
2. இருவருக்கு மட்டும் தெரிந்தால் இரகசியம்; பலருக்குத் தெரிந்தால் ------.
3. ராக தாளங்களுக்கு உரிய ஓசை ஒழுங்கு.
5. காளை குறியீட்டு வடிவமாயுள்ள இரண்டாவது ராசி.
6. இது பெண்களின் கண்களிலும் உள்ளதாக பாடல்கள் சொல்கின்றன.
9. உருண்டை வடிவானது.
10. பாதையில் இது வளைவு; நமது போக்கில், வளர்ச்சியில் ஏற்படும் மாற்றம். (தலைகீழ்)
13. உலகப் பொருள்களின் மீதும் உறவுகளின் மீதும் வைக்கும் ஆசை.
14. கடலோரக் குடிசைப் பகுதி. (தலைகீழ்)
16. கறந்தது மீண்டும் மடி புகாது. (தலைகீழ்)
17. "---- குயிலோசை சற்றே வந்து காதில் பட வேணும் என்றன் சித்தம் மகிழ்ந்திடவே நன்றாயிளந் தென்றல் வரவேணும்" என்றெல்லாம் பாரதி பாடினான்.
18. இதைக் கிளப்புதல் வதந்தியை விட மோசம்.
19. குடித்தால் வருவதுண்டு; கூலி குறைத்துக் கொடுத்தாலும் வரும்; கருத்து வேற்றுமையாலும் வரும் இது பிரச்சினைதான்.
21. சனநடமாட்டம் கூடினால் இது பெரும் சத்தம்தான்.
23. சாமிக்குப் படைக்கும் பொங்கல். (குழம்பி)
25. சாய்வான பகுதி அல்லது வீழ்ச்சி.
27. இப்போதைய பத்து மைல் முற்காலத்தில் இப்படி அழைக்கப்பட்டது. இங்கு கடைசி எழுத்தில்லை.
28. பார்த்தால் இந்த மரம் படுத்து விட்டால் நெடுமரம் என்று திருவிளையாடல் பாடல் சொல்கிறது, பாய்ந்தால் புலியும்தான்.

**விடைகளை மட்டும் தனியாக ஒரு தபாலட்டையில் எழுதி எதிர்வரும் 20ந் திகதிக்கு முன் அனுப்பி வையுங்கள்.**

**புதிய கண்ணோட்டம்**
**த.பெ.இல: 442**
**கொழும்பு**

## குறுக்கெழுத்துப் போட்டி-30 விடைகள்:

**இடமிருந்து வலம்:**

1. குஜ்ரால்
4. பகுபதம்
8. ஜடம்
9. புவி
10. பண்பாடு
11. கந்தோர்
13. பட்டிதொட்டி
15. கடைசி
16. வாகை
17. நிலா
18. போகி
19. தள
20. வேழம்
21. தச்சு
22. ராம்
23. பல்லி
24. கசை
25. தனி
27. அதிரடிப்படை
30. படிமம்
31. புளுகன்

**மேலிருந்து கீழ்:**


1. கும்பம்
2. ராஜபாட்டை
3. கட்டுடல்
5. குறுந்தொகை
6. தவிர்
7. (வ)ம்பு
11. கடிவாளம்
12. தோடி
14. நீலாம்பரி
15. சிகிச்சை
17. நிழல்
18. போதகர்
19. தராதரம்
20. வேலி
25. மதினி
26. துப்பு
27. அடி
28. பளு
29. கடை

**சரியான விடை எழுதி ரூபா 100 பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:**

**ந. கந்தசாமி,**
**அளுத் மாவத்தை,**
**கொழும்பு 15.**

**பாராட்டுப் பெறத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு பேர்கள் வருமாறு:**

1. ஜெ. விமலநாதன்,
   50, சூரியா ஒழுங்கை, மட்டக்களப்பு.
2. மொஹிதீன் எம். செரீஃப்,
   20, நீதிமன்ற வீதி, திருகோணமலை.
3. சாயிவித்ஷா பேரின்பநாயகம்,
   10, முதலியார் வீதி, மட்டக்களப்பு.
4. ஆர். கிருஷாந்தன்,
   952, ஸ்ரீஜயந்தி மாவத்தை, ஹுணுப்பிட்டி.
5. ஜெயவதனி சிவகுமார்,
   126, ஆஸ்பத்திரி வட்ட வீதி, வவுனியா.
6. ரி. கிருபாகரன்,
   156/8, 4வது ஒழுங்கை, உவர்மலை.
7. வே. நர்மதா,
   122/9, ஆஸ்பத்திரி வீதி, மட்டக்களப்பு.




இலங்கையை ஆட்சிசெய்த இரு அரசுகளில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில்தான் அரச பயங்கரவாதம் தாண்டவம் ஆடின என்பதும், இதனை மாற்றியமைக்க வேண்டும் என்ற மனோபாவம் மக்கள் மத்தியில் இருந்து வந்ததாலும் அதனை ஒரு முக்கிய பிரச்சாரமாகவும், சமாதான எண்ணம் கொண்டுமே தற்போதைய பொதுஜன முன்னணி அரசு ஆட்சிக்கட்டிலில் ஏறியது என்பது அனைவரும் அறிந்ததே.

பொதுஜன முன்னணி அரசு, ஆரம்பத்தில் அதன் போக்கில் மாற்றங்கள் தென்பட்டன. தமிழ் பேசும் மக்களுக்கு இந்நாட்டில் பிரச்சினை உள்ளது எனவும், சமாதானத்திற்கான பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபட்டது. இந்தக் காலத்திலேயே பல சமாதான இயக்கங்கள் முளைத்தன. சிங்களவர்கள் மத்தியில் சமாதானத்தின் அவசியம் பற்றிய கருத்துக்கள் பட்டிதொட்டியெங்கும் பரவவும் செய்தன.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலே பயங்கரவாதச் செயல்கள் அதிகரித்திருந்தன. இரத்த ஆறு ஓடியதும், பல இளைஞர்கள் காணாமல் போனதும், பலப்பலர் புதைகுழிகளில் போடப்பட்டதும்.... எனப் பல சம்பவங்கள் நடந்தேறின.

இவை பொதுஜன முன்னணி அரசில் முற்றாக இல்லை எனக் கூறுவதற்கு முடியாது. ஒப்பீட்டளவில் ஐ.தே.க. ஆட்சிக்காலம் போல் இல்லாமல், இப்போதும் நடக்கின்றன–குறைவாக.... என்று கூறலாம்.

இந்நடவடிக்கைகளில் இருந்தே மக்கள் அரசாங்கங்களில் நம்பிக்கை வைப்பதும், வைக்காமல் விடுவதும் தோன்றுகின்றது. அரசாங்கம் தான் மாறுகின்றது. அரசைக் காப்பாற்றும் அரச இயந்திரங்களின் போக்குகளில் மாற்றமில்லை என்ற எண்ணப்பாடுகள் தோன்றுவதற்கு காரணமாகவும் உள்ளன.

இன்று நம்நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்திக்குப் பெரிதும் தடையாக உள்ள காரணி இங்கு நடைபெறும் போர் ஆகும். இப்போரை நிறுத்தி சமாதானம் காண்பதால் மட்டுமே நாட்டை அபிவிருத்தி செய்யமுடியும். நாட்டில் சுபிட்சம் ஏற்படுவதன் மூலம் அவலம், ஏழ்மை அகற்றப்படும்.

இவற்றை எல்லாம் கருத்திற்கொண்டே நாட்டு மக்கள் சமாதானம் வேண்டுமென சந்திரிகா அவர்களுக்கு வாக்குகளை வாரி இறைத்தனர். இப்போதும் கூட உள்ளூராட்சித் தேர்தல்களில் அந்த நம்பிக்கைகளினடிப்படையிலேயேஅமோக ஆதரவளித்துள்ளனர்.

நம்நாட்டின் காற்றுகளில், கடலலைகளில், வான் மேகங்களில், பறவைகளின் சிறகசைவுகளில், பாடல்களில், மிருகங்களின் ஓசைகளில், மனிதர்களின் பேச்சுக்களில், காணாமல் போன மகனைத் தேடியலையும் தாயின் குரலில், கணவனை இழந்த மனைவியின் ஏக்கத்தில், போரில் மகனைப் பறிகொடுத்த தாயின் கண்ணீரில், அப்பாவைத் தேடி அழுத குழந்தையின் கண்ணீரில்... சமாதானம்! சமாதானம்!! சமாதானம்!!! என்ற ஏக்கமே காணப்பட்டது.

அண்மைக்காலநிகழ்வுகள், ஐக்கிய தேசியக் கட்சி காலத்தை மீண்டும் நினைவூட்டுவதாக ஆங்காங்கே நடைபெறுகின்றன. அரசபடைகளின் பூரணகட்டுப்பாட்டில்உள்ள வவுனியா சந்தைப்பகுதி, மட்டக்களப்பு நகரப்பகுதி என்பவற்றில் அண்மைக்காலங்களில் நடைபெற்ற கொலைகள் யாரால் நடந்தது?..... முற்றிலும் கட்டுப்பாடான இப்பகுதிகளில் நடந்தேறியிருக்கும் இக்கொலைகள் "யாரால்?" என்ற சந்தேகமே பிரதானமாகும்.

இந்தப் பாணிக் கொலைகள் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்காலத்தில் சர்வசாதாரணமாக நடைபெற்று வந்தன. இப்படியான கொலைகளால் மக்கள் பெரும் அச்சத்தோடு சீவிப்பதுடன், அன்று நடந்தது தான் இன்றும் நடக்கின்றது எல்லாம் ஒன்றுதான் என கூறியும் வருகின்றனர்.

இவற்றையெல்லாம் இனம் காண்பதுடன், மக்களுக்கு அச்சமற்ற வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுப்பது அரசின் கடமையாகும். இராணுவ நடவடிக்கைகளினூடாகவே அரசியல் செய்து, அதனால் மக்களைப் பரிதவிக்க விடுவது என்பது இவ்வரசின் மேல் மேலும் மேலும் வெறுப்பைத்தான் தோற்றுவிக்கும்.

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகும் தகைமையைப் புலிகள் இழந்து விட்டார்கள்

*அன்புடன் ஆசிரியருக்கு,*

**"மூன்றாமவரின் துணையுடன் பேசி முரண்படுவோரைத் தனிமைப் படுத்த வேண்டும்."**

எனது பார்வையில் இந்தவரிகளில் பெரும் அர்த்தங்கள் இருப்பதாகப் படுகிறது. இந்த மூன்றாமவர்கள் யார்? ஆயுதங்கள் வழங்கும் நாடுகளா அல்லது போர் நடக்க மறைமுக உதவிகளாக நிதி வழங்குபவர்களா அல்லது எமது தேசத்தில் சவச்சாலை அபிவிருத்திக்கு தாராளமாக வாரிவழங்கும் வள்ளல் நாடுகளா?

யாருக்கு இவர்கள் மூன்றாமவர்கள்? புலிகளுக்கா அல்லது அரசிற்கா? இப்படிப் பல கேள்விகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

இந்த மூன்றாமவர்கள் இன்னும் புலிகளுடனும் அரசுடனும் இறுக்கமான பிணைப்பை வைத்துக் கொண்டுதான் உள்ளார்கள். அழிந்து கொண்டிருக்கும் எமது தேசமும், அதில் அல்லற்பட்டு அவஸ்தைப்படும் மக்களும்தான் இன்னும் இவர்களுக்கு மூன்றாமவர்கள். அவர்களுடன்தான் பேசி இவர்கள் ஒரு முடிவுக்கு வரவேண்டுமே தவிர, இந்த மக்களை அழிக்க நிபந்தனையில்லாது ஆயுதங்களை வழங்கும் நாடுகளின் துணையுடன் பேசி அல்ல.




இந்த மூன்றாமவர்களுடன் பேசி எப்படிப் போரை முடிவுக்குக் கொண்டுவர முடியும். சும்மா இருக்கச் சோறாகும் வித்தையைக் கற்றவர்கள் எப்படிச் சோறு இல்லாது போவதற்கு பேசத் துணை போவார்கள்?

பேசுவதற்கு, அதில் சம்பந்தப்பட்டவர்களிடம் முக்கியமாக இருக்க வேண்டியது: விருப்பம், நல்லெண்ணம்(Goodwill). கெட்ட எண்ணத்துடன் பேசினால் எப்படி வெற்றி காண முடியும்?

இந்த நல்லெண்ணம் அரசிடமும் இல்லை. புலிகளிடமும் இல்லை. பிரச்சினைக்குரிய இரு பகுதியினரிடமும் பேசுவதற்கான மனோநிலை உண்மையாகவே இருந்தால் அவர்கள் பிரச்சினையை அவர்களே முடிவுக்குக் கொண்டுவரலாம்.

அதைவிடுத்து, எமது பிரச்சினைகளுடன் சம்பந்தப்படாத மூன்றாமவர்களுக்கு எமது பிரச்சினைகள் எங்கே தெரியப்போகின்றது?

எமது தேசத்தில் வாழும் ஒன்றரைக் கோடிக்கு மேற்பட்ட மக்களின் வாழ்வியல், உடைமை, உரிமை, உயிர் பாதுகாப்புப் பிரச்சினைகள்பற்றி, அந்த வாழ்விற்கும் வளத்திற்கும் அச்சுறுத்தல் தரும் நச்சு ஆயுதங்களை உற்பத்தி செய்து ஒழுங்காக விற்பனை செய்து பணம் பெறும் முதலை நாடுகள் துணையுடன் பேச என்ன இருக்கிறது?

தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கான அரசியல்தீர்வினை அரசு முன்மொழிய வேண்டும். இந்த நாட்டில் வாழும் ஒரு சிங்களக் குடிமகனுக்கு இருக்கும் சகல உரிமைகளுக்குச் சமமான உரிமைகள் இலங்கைத்தீவில் வாழும் தமிழ் பேசும் ஒவ்வொரு குடிமகனுக்கும் உண்டு என்ற உத்தரவாதம் உறுதி செய்யப்படக் கூடியதாக தீர்வுகள் வரவேண்டும்.

அரசு தனது அரசியல் தீர்விற்கான ஆலோசனைகளைப் பாரபட்சம் காட்டாது பகிரங்கப்படுத்தி தமிழ்பேசும் மக்களின் நல்லெண்ணத்தைப் பெற வேண்டும்.

அதேபோன்று, தமிழ்பேசும் மக்களின் சுபிட்சமான வாழ்விற்கு வழிவகுக்கும் திட்டங்களையும் தீர்வுகளையும் கோரிக்கைகளாகக் கொண்டு புலிகளும் பேச்சுவார்த்தை மேடைக்கு வரத் தயார் என்பதை ஒளிவு மறைவின்றிப் பகிரங்கப் படுத்த வேண்டும்.

தமிழ் பேசும் இனத்தின் உயிர் வாழ் பிரச்சினையில் புலிகளுக்கு இல்லாத அக்கறை எப்படி இலங்கை அரசுக்கு இருக்க முடியும்? தாங்களே தமிழ் பேசும் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்றால் தமிழ் பேசும் மக்களைக் காக்கும் கடப்பாட்டை, தார்மீகப் பொறுப்பை புலிகள் ஆயுதங்களுக்குப் பதிலாக தங்கள் கைகளில் ஏற்கவேண்டும்.

அப்பொழுதுதான் பேச்சுவார்த்தை உண்மையான வெற்றிகரமாகும்; பிரச்சினைகள் ஒரு முடிவுக்கு வரும். இந்த வரைமுறைகளுக்குள் அடங்காத பேச்சுவார்த்தை முடிவுக்கு வர முடியாது.

இப்படி முடிவுக்கு வரமுடியாத பேச்சுப் பேசுவதற்கு யாருடைய துணை வேண்டும்?

இலங்கையில் கடந்தகால வரலாறு காட்டும் பாடம், அரசுடன் நடந்த எந்தப் பேச்சுவார்த்தைகளும் ஒப்பந்தங்களும் ஒரு நல்ல முடிவை எய்தவில்லை என்பதே.

இருந்தும் 1987 ஆண்டு இன்று போல் இல்லாமல் ஒரு மூன்றாவது தலைமை தானே முன்வந்து பேச வேண்டிய நிர்ப்பந்தத்தை இலங்கை அரசுக்கு கொடுத்தது. இதுகாலவரை சிங்களஆட்சியாளரும் தலைவர்களுமே தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை அவர்கள் அடைய விடாமல் தடுத்து வந்தனர் என்ற நிலையை மாற்றி, தமிழ்த் தலைமைகளின் தலையிலே அந்தப் பொறுப்பை மூன்றாவது துணை நிர்ப்பந்தித்தது.

இந்திய இலங்கை அரசுகளுக்கு இடையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தை முறிப்பதில், தமிழ் பேசும் மக்களின் நலன்களுக்கு பாதகமான முடிவை புலிகள் பிரேமதாச அரசுடன் இணைந்து பணத்திற்கும் ஆயுதங்களுக்குமாக எடுத்துக் கொண்டார்கள். அந்தத் துரோகத் தனத்திற்கு மக்கள் அன்று துணை போனதினால் இன்று இலங்கை இராணுவம் அந்த இடங்களில் நிலைகொண்டுவிட்டதுடன், புலிகளின் ஈனச் செயலால் தமிழ் பேசும் இனத்தின் தேசிய விடுதலையும் திசைமாறி, மக்களும் வாழ்விடங்களை விட்டு வன்னிக்கு இடம்பெயர வைத்தது.

தமிழ் பேசும் இனத்தின் ஆட்பலத்தைக் குறைக்கும் குடியுரிமைச் சட்டத்திற்கு சார்ந்து நின்று தோட்டத் தொழிலாளரை நாடற்றவர்களாக்கிய பெரும் துரோகத்தைச் செய்த ஜி.ஜி. பொன்னம்பலத்தின் பின், இந்திய இலங்கை உடன்பாட்டை பிரேமதாசாவுடன் கூட்டுச் சேர்ந்து ஆயுதங்களுக்கும் பணத்திற்குமாக விலைபோய் இந்தியாவின் தலையீட்டை வெளியேற்றி, ஒப்பந்தம் இயங்காமல் செய்து தமிழ் பேசும்மக்களுக்குத் துரோகம்செய்த வரலாற்றுக்குருடர்களாகிய புலிகள் எப்படி மூன்றாமவர் துணையுடன் பேச இனி முன்வருவார்கள்?

இல்லை, இந்த உண்மைகளை அறிந்த எந்த நாடுதான் புலிகளின் மேல் நம்பிக்கை வைத்துப் பேச முன்வரும்? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

உண்மையாகச் சொன்னால், மக்கள் நலன், தேசிய நலன், மனித நேயம் என்ற அடிப்படைத் தேவைகளை முன்வைத்து சுயநலங்களை பின் வைத்து திறந்த மனத்துடன், தீர்வை எட்டும் நல்லெண்ணத்துடன், போராட்டத்தில் ஆயுதங்களுக்குக் கொடுக்கும் முன்னுரிமையை மக்களுக்குக் கொடுத்து, பேசுவதற்கு அரசும் புலிகளும் முன்வருவார்களானால் மூன்றாமவரின் துணையே தேவை அற்றுவிடும்.

அரசுக்கு, தனது குடிமக்கள் என்ற தார்மீகப் பொறுப்பும், புலிகளுக்கு, தமிழ் தேசிய இனத்தின் விடுதலை என்ற உணர்வில், மக்களுக்கே விடுதலை மண்ணிற்கு இல்லை என்பதும் அப்பழுக்கறத் தோன்றா விட்டால், எந்த மூன்றாமவரின் துணையும் பேசப் பயன்படா. அது எண்ணெய்க்குத் தப்பி நெருப்புக்குள் விழுவதையே ஒக்கும்.

*ஆறுமுகம்,*
*ஜேர்மனி.*



# அரசியல் தீர்வுக்கு புலிகள் வருவார்களா?

*அன்புடன் ஆசிரியருக்கு,*

தங்கள் பத்திரிகையைக் கிரமமாகப் படித்துவரும் ஆயிரக்கணக்கானோரில் நானும் ஒருவன். குறிப்பாக 'இனிய தமிழ் மக்களே!' என்ற தலைப்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன் எழுதும் கட்டுரையை மிகவும் ஆர்வத்தோடு படித்து வருகின்றேன்.

மார்கழி வெளியீட்டில் அவர் எழுதிய கட்டுரை சற்றுக் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதைத் தங்களுக்குத் தெரியப்படுத்தியே ஆக வேண்டும். நான் மட்டுமல்ல, என்னைப்போல் பலர் குழப்பமடைந்திருப்பார்களென்பது எனது திடமான நம்பிக்கை.

புலிகளின் தலைவர் பிரபாகரனின் மாவீரர் தினச் செய்தியை மேற்கோள் காட்டி எழுதிய அந்தக் கட்டுரையில், பிரபாகரன் தன்னையும் ஏமாற்றி, சக உறுப்பினர்களையும் ஏமாற்றியதோடு தமிழ்மக்களை ஏமாற்ற முயல்வதையும் மிகத் தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் மக்களின் விடுதலைக்கான போராட்டம் என்பதிலும் விட புலிகளை நிலைநிறுத்துவதற்கான போராட்டமாகவே பிரபாகரன் யுத்தத்தை நடத்தி வருகிறார் என்ற உண்மையை தனது கட்டுரையில் துல்லியமாக எடுத்துரைத்துள்ளார்.

ஆனால், அரசியல் தீர்வொன்றைக் காண பிரபாகரன் முன்வர வேண்டுமென்று அழைப்பு விடுப்பதுதான் விசித்திரமாக உள்ளது.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஏனைய தமிழ்இயக்க உறுப்பினர்களைப் பிரபாகரன் கொலை செய்ததன் மூலம் தமிழ் மக்களின் போராட்டத்தைப் பலவீனப்படுத்தினார் என்பது நூற்றுக்கு நூறுவீதம் உண்மை. இதன் பின்பே கோட்டையில் முடங்கிக்கிடந்த சிங்கள இராணுவம் வெளியே வரமுடிந்தது என்பதும் உண்மை. இதன் மூலம் புலிகளால் மாத்திரம் இராணுவம் முகாமுக்குள் முடக்கி வைக்கப்பட்டிருக்கவில்லை என்ற உண்மையும் வெளிநாட்டுத் தமிழர்களுக்கு தெரியவந்தது.

பிரபாகரனின்அறிவுகெட்ட நடவடிக்கைகளே இந்திய ராணுவம் இலங்கைக்கு வரவேண்டிய நிலைமைகளை உருவாக்கியது என்பதும், பல்வேறு அழிவுகளுக்குக் காரணமானது என்பதும் நிதானமாகச் சிந்திப்பவர்களால் புரிந்து கொள்ளப்படக் கூடியதே.

இருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசுடன் புலிகள் கைகுலுக்கிக் கொண்டனர். மாகாண அரசினால் ஏற்படுத்தப்பட்ட அற்ப சொற்ப உரிமைகளையும் புலிகளும் பிரேமதாசாவும் அழித்தனர்.

மாலைபோட்டு வரவேற்ற இந்திய இராணுவத்தை அதே தமிழ் மக்களுக்கெதிராகப் புலிகள் மாற்றினர். இந்திய இராணுவம் முற்றாக வெளியேறினால் பிரச்சினைகள் தீரந்துவிடும என மககளுககுக கூறினார்கள்.

ஏனையோர் பிரச்சினை அதிகரிக்கும், அழிவுகள் கூடும் எனக் கூறினார்கள். தமிழ் மக்களின் உரிமைகள் வழங்கப்படும்வரை இந்திய இராணுவம் வெளியேறக் கூடாது என மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் மக்கள் ஆயிரக்கணக்கில் ஊர்வலம் சென்றதையும் நாம் மறந்து விடக்கூடாது.

யுத்தத்தினால் ஏற்படும் அவலங்களினாலும், அழிவுகளினாலும் களைப்புற்ற மக்கள் சமாதானத்திற்கும், அமைதிக்கும் ஏங்கித் தவித்தார்கள். சந்திரிகா அரசுக்கும், புலிகளுக்குமிடையில் மோதல் தவிர்ப்பு உடன்பாடு ஏற்பட்டு, பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்தபொழுது மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டார்கள். அத்துடன் மனதில் பலவித எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தினர்.

மக்கள் சற்று ஆறி அமர முன்னரே புலிகள் பேச்சுவார்த்தைகளை முறித்துக் கொண்டு மீண்டும் யுத்தத்தை ஆரம்பித்தார்கள்.

இப்படிப் பலதடவை மக்களின் நலன்களிற்கும், விருப்பங்களுக்கும் மதிப்பளியாது தன்னிச்சையாகச் செயற்பட்ட புலிகள், தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இருக்கும் தகைமையை இழந்துவிட்டார்கள் என்பதே எனது வாதம்.

ஏனைய இயக்கப் போராளிகளை, ஆதரவாளர்களைப் புலிகள் அழித்த சமயம் எதிர்ப்புத் தெரிவித்த மக்களைப் புலிகள் ஆயுதம் கொண்டு மிரட்டி அடக்கினார்கள்.

இந்தியாவின் பாதுகாப்பை முக்கிய நோக்கமாகக் கொண்டு இந்திய இராணுவம் இலங்கை வந்திருந்த போதிலும், படிப்படியாகத் தமிழ் மக்களின் பிரச்சினையை விளங்கிக்கொண்டு இலங்கை அரசுமீது அழுத்தங்களை இந்திய அரசு ஏற்படுத்தியது.

இந்த நெருக்கடியிலிருந்து விலகமுடியாது திணறிய பிரேமதாசா அரசுக்குப் புலிகள் கைகொடுத்து தமிழ் மக்களுக்கு மாபெரும் துரோகமிழைத்தனர். இம் மன்னிக்கமுடியாத துரோகத்தைப் புரிந்த புலிகள் எவ்வாறு தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தகுதியுடையவர்களாவார்கள்?

புலிகளின் பல தவறுகளைச் சுட்டிக்காட்டிய சுரேஷ், மக்களின் அழிவைத் தடுத்து கௌரவமான நீதியான அரசியல் தீர்வொன்றைக் காண பிரபாகரன் முன்வரவேண்டுமெனக் கூறுவது பொருத்தமற்ற கோரிக்கையாக இருக்கிறது.

பிரபாகரன் யுத்தமற்ற சூழ்நிலையில் சீவிக்கும் துணிவற்றவர். யுத்தச் சூழ்நிலை தொடர்வதே அவரின் கோழைத்தனத்திற்கு சரியான கவசம்.

எனவே தனது கோழைத்தனத்தை மறைக்க அவர் தொடர்ந்து யுத்தத்தில் ஈடுபட்டே வருவார். அவரிடம் போய் தமிழ் மக்களின் நலன்களை மதிக்குமாறு கேட்பது செவிடன் காதில் ஊதும் சங்காகும்.

தமிழ் மக்களின் நலன்களில் அக்கறையுள்ள தமிழ்க் கட்சிகள், சந்திரிகா அரசிடம், தீர்வைத் தெளிவாக வெளிப்படுத்துமாறு ஒரே குரலில் கேட்பதன் மூலமே பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட வழிபேற்படும்.

சந்திரிகாஅரசு சரியான தீர்வை முன்வைக்க வேண்டிய கடமைப்பாட்டிலிருந்து தப்பித்து வருவதற்கும் புலிகள்தான் காரணமாக இருக்கிறார்கள்.

புலிகள் தொடர்ந்து சிங்கள அரசாங்கங்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் உதவி செய்து கொண்டுதான் வருவார்கள்.

சந்திரிகா அரசு எவ்வாறு புலிகளுடன் யுத்தத்தைக் காரணம் காட்டித் தீர்வை முன்வைப்பதில் காலம் கடத்தி வருகிறதோ அதேமாதிரி, ஏனைய தமிழ்க் கட்சிகளும் 'புலிகள் திருந்துவார்கள், மக்களின் நலன்களுக்கு மதிப்பளிப்பார்கள்' என்று காத்திராமல் உடனடியாக அரசு மீது அழுத்தங்களை ஏற்படுத்த முன்வரவேண்டும்.

இதை மக்களின் நலன்களில் அக்கறையுள்ள தமிழ்க்கட்சிகள் உணர்ந்து செயற்படுவது இன்றைய காலகட்டத்தின் கடமையாகும். இக்கடமையிலிருந்து தவறுபவர்களை எமது வருங்கால சந்ததி மன்னிக்கவே மாட்டாது.

*இப்படிக்கு,*
*எல். ஜெயக்குமார்,*
*ரூட்டிங், லண்டன்.*

படிப்பகம்

www.padippakam.com



## கண் போன பின் சூரிய நமஸ்காரம்

புதிய கண்ணோட்டம் தாங்கி வரும் செய்திகள்ஆணித்தரமானது. அரசு சார்பாகவும், புலி சார்பாக வும் வரும் பல பத்திரிகைகளுக்குள் கண்ணோட்டம் தனியானது.

மாமிச வெறி பிடித்த சிலரும், ஆயுதப்படையும் இன்று நமது மக்க ளைப் போட்டு முறித்துக் கொண் டும், வீரப்பட்டம் கேட்டுக் கொண் டும் திரிகின்றனர்.. எமது நாட்டின் தலை எழுத்தை மாற்றவும் விமோ சனம் தரவும் யார் வருவார்கள் என்று மக்கள் ஏங்குகிறார்கள். என்ன, கலியுக ராமனா வருவான்?

வந்த ராமனை, போர்த் தந்திரம் என்று கூறியும், எமது நாட்டுப் பிரச் சினையை நாமே தீர்ப்போம் என்று கூறியும் பிரேமதாசாவுடன் கைகுலு க்கி அனுப்பியது நேற்றுத்தானே நடந்தது?அன்று இதை சரியென்று நியாயப்படுத்தியவர்கள் இன்று எங் கே? தங்கள் லாபம், தங்கள் குடும் பம் என்று திரிகின்றார்கள். தங்கள் பிள்ளைகளை வெளிநாடு அனுப்பி விட்டு அங்கிருந்து வரும் அகதிப் பணத்தில் வாழ்கிறார்கள்.

வசதி இல்லாதவன் தாண்டிக் குளத்திலும், வேப்பங்குளத்திலும் காய்கிறான். பணமுள்ளவன் இரா ணுவத்தின் வலது கையிடம் பத்தா யிரம் இருபதாயிரம் என்று கொடுத் துவிட்டு தனது பிள்ளைகளை வெளியே எடுத்து விடுகிறான். இல் லாதவன் எங்கே போவான்?

இப்போது மக்களின் நிலை என்ன? 1989ல் தமிழர் தமிழரை ஆண்டனர். அப்போது புத்திஜீவி கள் என்று தங்களைத் தாங்கள் கூறித் திரிந்தவர்கள் கூறினார்கள். "இவர்கள் வடக்கத்தியானுடன் சேர் ந்து எங்களை ஆள்வதா?" என்று.


இன்று பார்த்தீர்களா? வேலி யைப் பயிர் மேய்ந்து, சொந்த மண் சொந்த நிலம் உற்றார் சுற்றார் எல் லோரையும் விட்டு, நாய்கள் போல் பஞ்சப்பரதேசிகள் போல் அகதி மு காம்களில்அடைபட்டு எமது சந்ததி அவதிப்படுவதை.... இனியாவது வெற்று மார்தட்டல்களை விட்டுச் சிந்தியுங்கள்! செயல்படுங்கள்!

'படித்தவர்கள் நாங்கள்' என்று பட்டம் விட்டவர்கள் வால் பிடித்த வீராதிவீரர்கள் எங்கே? கனவுக் கோட்டைகள் எங்கே?

இம்மண்ணிலே சிதைந்துபோன வையும், காணாமல் போனவர்க ளும், எலும்புக்கூடுகளுமே மிச்சம் உள்ளது. இது தொடரவேண்டுமா? எமது மண்ணில் இனி எப்போது சுதந்திரமாக நாம் நடமாடுவது? இனியாவது மக்களை வாழவிடுங் கள்?மக்களே! நாம் வாழவேண்டும் என்று கேட்டு முன்வாருங்கள்.

சந்திகளில் நின்று ஒருதலைப் பட்சமாக விமர்சிப்பவர்களுக்கு உறைப்பதற்காக இக்கட்டுரையை கடிதப் பகுதியில் பிரசுரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு,
அமரன், மன்னார்.



## இலக்கிய கலாநிதி F. X. C. நடராசா காலமானார்

தமிழறிஞர், மகாவித்துவான், கலாசூரி, இலக்கிய கலாநிதி எஃப்.எக்ஸ்.சி. நட ராசா 16.03.97 அன்று மட்டக்களப்பில் காலமானார். யாழ்ப்பாணம் காரைநக ரில் பிறந்த இவருக்கு வயது 86.

சிறந்த நூலாசிரியராக, ஆய்வாளராக, விமர் சகராக, மொழிபெயர்ப்பாளராகத் திகழ்ந்த இலக்கிய கலாநிதி அவர்கள் இருபத்தைந்துக் கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள் ளார். அரச கரும மொழித் திணைக்களத்தில் மொழிபெயர்ப்பு அத்தியட்சகராக கடமையாற்றி 1971ல் ஓய்வு பெற்றார்.

இலங்கையிலும் தமிழகத்திலும் பெரிதும் போற்றி மதிக்கப்படும் தமி ழறிஞராக வாழ்ந்தார். அகில உலக தமிழாராய்ச்சி மாநாடுகள் பலவற் றிலும் பங்குகொண்டு ஆராய்ச்சியா ளர்களின் நன்மதிப்பைப் பெற்றவர். தமிழ் இலக்கியத்திலும் தமிழ் இலக் கணத்திலும் புலமை பெற்று பிழை யற்ற தமிழ் வளர வேண்டும் என்ற பேரார்வத்தோடு உழைத்தவர் எஃப். எக்ஸ்.சி. நடராசா அவர்கள்.

மகாவித்துவான், இலக்கியச் செம்மல், கலாசூரி போன்ற கௌர வப் பட்டங்களைப் பெற்ற இவருக்கு கடந்த வருடம் கிழக்குப் பல்கலைக்கழகம் இலக்கிய கலாநிதி பட்டத்தை வழங்கியது.

மட்டக்களப்பு கலை இலக்கிய அமைப்பு கள், நண்பர்கள் சேர்ந்து அன்னாரின் நினை வாக கடந்த 18ம் திகதி மட்டக்களப்பு புனித மரியாள் இணைப்பேராலய முன்றலில் இரங் கற் கூட்டம் ஒன்றினை நடாத்தினர். அறிஞர் களும், அரசியல் பிரமுகர்களும், அதிகாரிக ளும், கலை இலக்கிய ஆர்வலர்களும் கூட்டத் தில் கலந்துகொண்டு இரங்கலுரை ஆற்றினர். மக்கள் திரளாக வந்திருந்து மறைந்த அறிஞ ருக்குத் தங்கள் அஞ்சலியை செலுத்தினர்.




இந்நாவலில் வரும் சம்பவங்களும் உரையாடல்களும் மற்ற நிகழ்வுகளும் கற்பனையே; ஆயினும் அவற்றின் பின் நிற்கும் உணர்வுகள் அப்பட்டமானவையே. சொந்த அனுபவங் களிலிருந்து ஏற்படும் உணர்வுகள்தான் அப்பட்டமானவையாக இருக்க முடியும். எனவே என் சொந்த அனுபவங்களுக்கும் இந்நாவலில் வரும் கதாபாத்திரங்களுக்கும் மிக நெருங்கிய பந்தம் ஏற்பட்டுவிட்டது. இதில் வரும் பாத்திரங்களில் பலரும் இன்னும் என்னைச் சுற்றி இருப்பவர்களை, இருந்தவர்களைத்தான் பிரதிபலிக்கிறார்கள் என்ற உண்மையை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

- பா. விசாலம்

பழைய மரபுகளில் ஊறிய ஒரு கூட்டுக் குடும்பத்து கடைசிச் சந்ததிப் பெண், வாழ்க்கையின் நிர்ப்பந்தங்களுக்கு ஆளாகி எப்படி காரண காரிய பிரக்ஞையும் முன்னேற்ற மனப்பான்மை யும் கொண்ட கம்யூனிஸ்டாக மலர்கிறாள் என்பதை சுவாரஷ்யமாய் சொல்கிற இந்நாவலில் பல இந்திய அரசியல் தலைவர்கள் தங்கள் உண்மைப் பெயர்களுடனேயே வருகிறார்கள். இது நாவலுக்கு ஓர் உண்மை அழுத்தத்தைத் தருகிறது. பா. விசாலம் எழுதிய 'மெல்லக் கனவாய் பழங்கதையாய்...!' நாவலிலிருந்து சில பகுதிகள்:

"நீங்க எப்போ வந்தீங்க தோழர்?"

"நான் காலையிலே ஒன்பது மணி தக்கலை- நாகர்கோ வில் பஸ்ஸில் வந்தேன். தோழர் உங்களைப்பற்றி சொல்லி நேராக உங்க வீட்டிற்கே கூட்டிக்கிட்டு வந்திட்டாரு."

நான் அம்மாவைப் பார்த்தேன்.

அம்மா அடுக்களைக்குப் போனாள். அடுக்களையில் ஒண்ணுமில்லேன்னு எனக்குத் தெரியும். நானும் பின்னா லேயே போனேன்.

"ஒண்ணுமில்லையேடி. பால் மட்டுமிருக்கு. பஞ்சாரை யுமில்ல, தேயிலையுமில்ல."

"அதுக்கு ஏம்மா இத்தன கவலப்படுக?"

அதற்குள் என்.கே. எழுந்து வந்து சுவாதீனத்துடன், "என்னா அங்க அம்மையும் மகளும்! ஒண்ணும் வேண்டாம் வெறும் 'டீ' போடுங்க போரும்."

"அதுதான் அம்மா சொல்லிட்டிருக்கா. பஞ்சாரையு மில்ல தேயிலையுமில்ல, பால் மட்டும் தானிருக்கு."

நான் இப்படி ஸ்பஷ்டமாகச் சொல்லவும் அம்மா ரொம் பக் கூசிப் போனாள்.

ஒரு பத்து நிமிடத்திற்குள் தோழர் என்.கே. தானே வெளி யே சென்று அரை ராத்தல் பஞ்சாரையும் தேயிலையும் வாங்கிக் கொண்டு வந்தார்.

இப்படியும் நடக்குமா என்பது போல் அம்மா என்னைப் பார்த்து விழித்தாள்.

அம்மாவிற்கு தோழமைன்னா என்னங்கிறது இப்போது நன்றாகப் புரிந்து விட்டிருக்க வேண்டும். கண்கள், பனித்த மாதிரி இருந்தது.

அதற்குள் ஏற்கனவே முகமது அலியிடம் கல்யாணம் ஆகிவிட்டதா, சொந்த ஊர் எது என்ற விபரங்கள் கேட்டு அறிந்ததுடன், தானும் அவர்களுடன் கட்சிக்காக எதுவும் எந்த உதவியும் செய்யத் தயாராக இருப்பதாகவும் போன்ற விபரங்கள் எல்லாம் சொல்லி முடித்துவிட்டாள். எல்லா தோழர்களிடமும் சொல்வதுபோல் "இது உங்க வீடு மாதிரி தான், வித்தியாசமாகவே நினைக்க வேண்டாம் என்பதையும் சொல்லிவிட்டாள்.

நான் தேயிலை கலந்து எடுத்து வரப்போனேன். அம்மா தண்ணீரைக் கொதிக்க விட்டுக் கொண்டிருந்தாள்.

"நான் பெத்த பிள்ளைகோ பத்து பைசாவிற்கு என்கிட்ட கணக்குப் பாக்கிற இந்தக் காலத்துலே, என் காசு உன் காசுன்னு வித்தியாசம் பாக்காமே பழகுகிற இந்தப் பிள்ளை யாண்டான்களுடைய குணம் ஒரு லட்சப் பிரபுவுக்கு வரு மான்னு கேக்கறேன். நீ சொன்னாலும் சொல்லாவிட்டாலும் கூட, ஒங்க கட்சிக்காக இல்லாவிட்டாலும் கூட நான் இவ னுகக் கூடத்தான் நிப்பேன். இந்த உலகமே எதுத்தாலும் சரி யார் என்ன சொன்னாலும் சரி ஆமா......"

ஃ ஃ ஃ ஃ ஃ

"தோழர், என்ன யோசனை, புறப்படலாமா"ன்னு நந்தன் கேட்ட பிறகுதான் உணர்வு வந்தது. கையில் வாட்சைப் பார்த்தேன். மணி 4.30 ஆகிவிட்டிருந்தது.

"எனக்கு கூட்டத்திற்கு வரவே பிடிக்கல்ல."

"....ஆனால் அது சரியல்ல. வாருங்க போகலாம்."

"இல்ல.... என்னப் பேச போடாட்டாலும் பரவா இல்ல, கூட்டம் நடக்கப் போற விபரம் கூட எங்கிட்ட சொல்ல லையே?!"

எனக்கு அழுகையே வரும் போலிருந்தது.

தோழர் என்னையே இமை கொட்டாமல் பார்ப்பதை உணர்ந்தேன். தொண்டையை கனைத்து விட்டு, நிதானமாக,

"நான் சொல்லப் போவதை நீங்க கேக்கறேளா"

நான் தோழரின் முகத்தை நிமிர்ந்து பார்த்தேன்.

"சில விஷயங்களை நாம கவனிக்கத் தவறக்கூடாது. இன்னைக்குள்ள கட்சி நிலவரத்த நான் உன்னிப்பா கவனிச் சிட்டுத்தான் வாறேன். கட்சித் தடை நீக்கப்படறதுக்கு முன் னாலே கட்சி செய்த தியாகம், தலைமறைவு வாழ்க்கை, அதிலே தோழர்கள் பட்ட கஷ்டங்கள், தலைமறைவா இருக்க உதவின குடும்பங்கள் பட்ட கஷ்டங்கள், போலீஸ் அடக்கு முறைக்கு ஆளாகி அவுங்க அனுபவிச்ச கொடுமைகள்; இவை நமக்குத் தெரியும். அதுக்கப்புறம்.... கட்சியின் இந்தத் தியாக வாழ்க்கையினாலேயே, போராடித்தான் ஏதாவது சாதிக்க முடியும்னு, கஷ்டப்படுகிற மக்கள் புரிய ஆரம்பிச் சாங்க, கட்சி வளர ஆரம்பிச்சுது."

"ஆமாமா.... அதுதான் இப்போ பாக்கிறோமே! வெகுஜனக் கட்சின்னு சொல்லிக்கிறோமே, இல்லையா?!"

"நம்ம தோழர் ராமமூர்த்தி மதுரையில் ஜெயிலில் இருந்து கொண்டே ஜெயித்ததைப் பார்த்தோம்..... இப்படியாக வெகு ஜனக் கட்சியாக வந்ததற்கு பிறகு பல நிலையில் உள்ளவர் களும் கட்சிக்கு வர்றாங்க. உதாரணமா மாணவர்கள், வியா பாரிகள், ஏன் குட்டி முதலாளிகள் கூட கட்சி உறுப்பினர் களாகிறதைப் பார்க்கிறோம். அதனாலே என்னாகிறது? அன்னைக்கு விரல் விட்டு எண்ணக்கூடிய தோழர்கள் மாத்திரம் இருக்கும்போது, அவர்களுக்கு மற்றவர்கள் கிட்ட இருந்த செல்வாக்கு கட்சிக்குள் மற்றவர்களுடைய வரவால், அதுவும் படித்தவர்கள் வரவால் போயிருமோன்னு பயம். ஆனால் அது சாதாரண நிலையிலுள்ள தோழர்களுக்குத் தான் பொருந்தும். ராமமூர்த்தி, பரமானந்தம், ஈ.எம்.எஸ்., சர்மாஜி, ஏ.கே.ஜி. இந்தத் தோழர்களுக்கெல்லாம் பொருந் தாது. பின்னும் கேளுங்கள். கட்சிக்கு வருகிற சொற்ப வரு மானத்திலே முழுநேர ஊழியராக இருக்கிற தோழர்களும், கட்சியில் தங்களுக்கு இருக்கும் பொசிஷன் போயிட்டா வேறு வேலைக்கும் போக முடியாம, என்ன செய்வோம்கிற பயம் தான் இப்படிப் பலதுக்கும் காரணம்னு நான் நினைக்கிறேன். இன்னும் சொல்லப்போனா டவுன் கமிட்டியிலே கூட நான் இல்லாமலே சில சமயம் கூடி சில முடிவுகள் எடுக்கவும் செய்யத்தான் செய்றாங்க."

"ஆனால், அதெப்படி நீங்க விட்டுக் கொடுத்திட்டிருக் கலாம்?"

"அதுதான் சொல்ல வாறேன் கேளுங்க தோழர். என்னை பொறுத்தவரையில் நான் கட்சியில் ஒரு சாதாரண அங்கத் தினராக இருந்தாலும் என்னாலே மாறி வரும் சமுதாயத் திற்காக எவ்வளவோ செய்ய முடியும். ஆனால் இதற்காக நான் பயப்படல. இரண்டாவதா முழுநேர ஊழியரா இருந்து கட்சிக்கு பாரமா இருக்கவும் நான் விரும்பல்ல."

"அதென்ன சொன்னீங்க.....? எல்லோரும் கட்சியிலே முழுநேர ஊழியரா இருக்கணும்கிறது, அதிகமாக வேலை செய்யத்தானே! தாங்கள் முழு நேரத்தையும், வாழ்க்கையை யும் கட்சிக்கு செலவிடணும்னுதானே நினைப்பாங்க? சொல்லப்போனா அது பெரிய தியாகமில்லையா? அதெப்படி கட்சிக்கு பாரமாகும்?"

"ஆமா..... எல்லோரும் முழுநேர ஊழியராக மாறிட்டா கட்சிக்கு வருமானம் எப்படி வரும்? நாம் வேலை செய்து கட்சிக்குப் பணமாகவும் தரலாமல்லவா? அதுவும் இன்னைக் குள்ள நிலைமையிலே கட்சி மேலும் வளரணும்னா பணம் எவ்வளவு தேவையான விஷயங்கிறத நீங்களே பார்க்கிறீங் களே..."

"அதுவும் சரிதான். நீங்கள் சொல்றது எனக்க ரொம்ப சரிதான்னு இப்போ புரிகிறது. நாமும் பணக்காரர்களுடைய கட்சியில்லையே. அவர்கள் பணத்தை அள்ளித் தர்றதுக்கு. நாம்தான் ஏழைகள் கட்சி ஆச்சே."

நான் வாட்சைப் பார்த்தேன். மணி 5.30 ஆகிவிட்டிருந் தது. ஆபீஸைப் பூட்டிவிட்டு கூட்டம் நடக்கும் இடத்திற்குப் போனோம்.

ஒரு வகுப்பாரை குரூர மிருகமாகவும், மற்றொரு வகுப்பாரை அந்த மிருகத்துக்கு இரையாகும் பலவீன மிருகமாகவும் செய்யும் இன்றைய சமூக அமைப்பு ஒழியத்தான் வேண்டும்.

– காண்டேகர்.


ஒரு கொடிய செயலைச் செய்தவனின் மனதில் ஏற்படுவதை விட, அதைச் சும்மா பார்த்துக் கொண்டிருந்தவனின் மனதில் அதிக அளவு மனவேதனையை உண்டாக்கும் குற்றங்களும் இவ்வுலகில் உண்டு.

– ஸீக்ஃப்ரீட் லென்ஸ்

படிப்பகம்

www.padippakam.com






தனித் தமிழீழத்துக்காய்ப் போராடி வரும் நண்பர்களே! உங்கள் வீரதீரமிக்க யுத்தஆற்றலால் நீங்கள் பல சாதனைகளைப் புரிந்துள்ளீர்கள். பெயர் சொல்லும் பல தாக்குதல்களை நடாத்தியுள்ளீர்கள். பூநகரித் தாக்குதல், முல்லைத்தீவுத் தாக்குதல், பரந்தன் தாக்குதல் என பல வீரம் செறிந்த தாக்குதல்கள். இதனை எவராலும் மறுக்க முடியாது.

இதே போன்று சிறிலங்கா அரசையே திணறடித்த மத்திய வங்கித் தாக்குதல், கொலன்னாவை எண்ணெய்க்குதத் தாக்குதல், தெஹிவளை ரயில் தாக்குதல் எனப் பல தாக்குதல்களை கொழும்பிலும் நடாத்தியுள்ளீர்கள்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மிக அதிகமான போராளிகளை இழந்துள்ள இயக்கமாகவும் நீங்களே உள்ளீர்கள். கரும்புலிகள், கடற்புலிகள், பெண்புலிகள், ஆண் புலிகள் என பல ஆயிரக்கணக்கான போராளிகளை நீங்கள் இழந்துள்ளீர்கள். தற்கொலைப் போராளிகள் என பல போராளிகள் முன் வந்து தம்மைத்தாமே அழித்துள்ளார்கள்.

இவ்வளவும் என்னத்துக்காக நடைபெற்றது? தமிழ் மக்களுக்கு நீதியான தீர்வு வேண்டும் அவர்கள் தம்மைத் தாமே ஆள வேண்டும் என்பதற்காகத்தானே.

ஆனால் இன்று எமது போராட்டக் களம் எவ்வாறு உள்ளது என்பதைச் சற்று நிதானமாகச் சிந்தித்துப் பாருங்கள். யாழ்ப்பாணத்தை இழந்து, கிளிநொச்சியை இழந்து, மன்னாரை இழந்து, இன்று முல்லைத்தீவுக் காடுகளில் தஞ்சமடைய வேண்டிய நிலைமை.

'இதெல்லாம் யுத்த தந்திர ரீதியான பின்வாங்கல்தான். நாம் இழந்த இடங்களை மீண்டும் கைப்பற்றுவோம். கெரில்லா போராட்ட ரீதியில் அரச படைகளை அழித்து அரசுக்கு நெருக்குவாரத்தை ஏற்படுத்துவோம்' என நீங்கள் கூறலாம். நான் மறுக்கவில்லை.

ஆனால், ஒப்பீட்டு ரீதியில் பார்த்தால் அரச படைகள் ஆயிரக்கணக்கான தனது சிப்பாய்களை பல தாக்குதல்களில் இழந்தபோதும் கூட, பல பிரதேசங்களைத் தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளன.

பலாலியை விட்டு இராணுவத்தால் வெளியேறமுடியாது என முழு மக்களும் ஒரு காலத்தில் நம்பினோம். யுத்த நிதியாக, மண் மீட்பு நிதியாக பல ஆயிரம் ரூபாய்களையும், எமது பிள்ளைகளையும் இதற்காக நாம் தந்தோம்.

ஆனால் நடந்ததென்ன? நீங்களும் வெளியேறி, எங்களையும் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற்றினீர்கள். கிளிநொச்சியில் தஞ்சமடைந்தோம்.

'இது தற்காலிகப் பின்வாங்கல் தான், மிக விரைவில் மீண்டும் யாழ்ப்பாணத்தைப் பிடிப்போம்' என்றீர்கள். நாங்களும் நம்பி கிளிநொச்சியில் அகதிகளாய் அலைந்தோம்.

இராணுவம் கிளிநொச்சியையும் கைப்பற்றியது. 'அவர்கள் உள்ளுக்கு வரவிட்டு நாங்கள் அடிக்கப் போகின்றோம். அதுவரை முல்லைத்தீவு, துணுக்காய், மன்னார் பெருநிலப்பரப்பில் தங்குங்கள்' என்றீர்கள். நாமும் சரியென்று அங்கும் அகதியாய் அலைந்தோம்.

இன்று மன்னாரும் அவர்கள் கட்டுப்பாட்டிற்குள். நாங்கள் 4வது தடவையாக மீண்டும் அகதிகளாகியுள்ளோம்.

இந்நிலையில் 'இழந்து போன இடங்களை எல்லாம் நாங்கள் மீளக் கைப்பற்றுவோம், இலங்கை அரசை அடிபணியச் செய்வோமென உங்கள் தலைமை கூறிவருகின்றது. இது நடைமுறைச் சாத்தியமா என்பதை கொஞ்சமேனும் சிந்தித்துப் பார்த்தீர்களா?

'வடக்கை இழந்தாலும் கிழக்கில் எமது இராணுவத் தாக்குதல்களை அதிகரித்துள்ளோம். இதன் மூலம் அரசுக்கு நெருக்குவாரத்தை ஏற்படுத்தி வருகின்றோம்' எனவும் உங்கள் பத்திரிகைகளில் எழுதுகின்றீர்கள்.

எத்தனை பொலீசார் கொலை, எத்தனை இராணுவம் கொலை, எத்தனை ஆயுதங்கள், என்ன ரக ஆயுதங்கள், எத்தனை ஆயிரம் ரவைகள் கைப்பற்றப்பட்டதென விளக்கமெல்லாம் கூறுகின்றீர்கள்.

ஆனால் இதனால் எவ்வளவு மக்கள் கொல்லப்பட்டார்கள்? எவ்வளவு ஆயிரம் மக்கள் அகதிகளானார்கள்? எவ்வளவு சொத்துப் பத்துக்கள் அழிந்தன? இறுதியில் இவர்களும் அகதிகளாகி இடம்விட்டு இடம்பெயர்ந்து சாக வேண்டியது தானா?

உங்களது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் புதிய போராளிகளை இணைப்பதற்குப் பல அலுவலகங்களைத் திறந்துள்ளீர்கள். இங்கு உங்கள் அற்புதமான தாக்குதல்களை மிகவும் உணர்ச்சிபூர்வமான முறையில் படம்பிடித்து மக்களுக்கு காட்டுகின்றீர்கள்?

உண்மையாக, உங்களிடம் நீங்களே கேட்டுப்பாருங்கள். இதனைப் பார்த்து எத்தனை பேர் உங்களுடன் இணைகின்றார்கள்? உங்களிடம் மிக அதிகபட்ச ஆயுதங்கள் இருக்கின்றதென்பது உண்மை. ஆனால் அக்கருவிகளைப் பாவிக்க உங்களுடன் இளைஞர்கள், யுவதிகள் இணைவது வலுவாகக் குறைந்து விட்டது என்பது உங்களுக்கே தெரியும்.

மறுபக்கத்தில், காயமடைந்த நூற்றுக்கணக்கான போராளிகள் மருத்துவ வசதி இல்லாமல் உங்கள் முகாம்களில் மரணமடைந்து வருகின்றார்கள். இரத்த ஓட்டத்தைக் கட்டுப்படுத்தும் மருந்துகள் பற்றாக் குறையால் சாதாரண காயம் பட்ட உங்கள் தோழர்களே இறந்துள்ளார்கள்.

இந்த நிலைமையில் இந்த யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதால் என்ன இலாபத்தைச் சம்பாதிக்க முடியும் என நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள்?

இந்திய இராணுவத்துடன் ஓர் யுத்தத்தை தொடங்கி அதில் பல பேரைப் பலி கொடுத்தீர்கள். பின்னர் இந்தியாவையே பழிவாங்க வேண்டும் என்பதற்காக ராஜீவ்காந்தியைக் கொலை செய்தீர்கள்.

இன்று இந்தியாவில் தடை செய்யப்பட்ட ஓர் பயங்கரவாத அமைப்பாக நீங்கள் உள்ளீர்கள். உங்களுக்காக மருந்து சேகரித்த ஆதரவாளர்களே இன்று தமிழகச் சிறைச்சாலைக் கம்பிகளை எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். 'புலி' என்ற பெயரை உச்சரிக்கவே முடியாதபடி சட்டங்கள் போடப்பட்டுள்ளன. புலி வேறு, தமிழர் பிரச்சினை வேறென கலைஞர் கருணாநிதியே கூறும் இச்சூழ்நிலையை உருவாக்கியதும் நீங்கள் தான். இந்நிலையில் அருகிலிருக்கும் எமது உடன்பிறப்புக்களின் ஆதரவையும் இழந்து போய் நிற்கின்றோம்.

இவையெல்லாம் தற்காலிகமானவை என உங்கள் தலைமை உங்களுக்குக் கூறலாம். ஆனால் உண்மை அதுவல்ல.

உங்கள் தலைமையின் நடவடிக்கைகள் எமக்கு எதிரிகளைத் தான் அதிகரித்துள்ளன. தனிநாட்டுக்காகப் போராடப் புறப்பட்ட எல்லா இயக்கங்களையும் அழித்தீர்கள். சிறீசபாரத்தினம், பத்மநாபா, அமிர்தலிங்கம் என பல தலைவர்களை அழித்தீர்கள்.

'துரோகிகள்' எனப் பட்டம் சூட்டிப் பல பொது மக்களைக் கொலை செய்தீர்கள். உங்களை விமர்சித்ததற்காக ரஜனி திரணகம போன்ற அரும்பெரும் அறிஞர்களை அழித்தீர்கள்.

'றோ' ஏஜென்ட் என உங்கள் பிரதித் தலைவர் மாத்தையாவையே கொலை செய்தீர்கள். ஆனால் இந்திய இராணுவம் இங்கிருந்த காலகட்டத்தில் பிரபாகரனை பாதுகாப்பாக இருக்கவிட்டு, இந்திய இராணுவத்திற்கெதிரான தாக்குதல்களில் மாத்தையா முன்நின்றார் என்பதை நீங்கள் மறந்து விட்டீர்களே!

எல்லோரையும் அழித்துவிட்டு தனித்து நின்று போராடும் நீங்கள் போராட்டத்தில் வெற்றி பெறுகின்றீர்களா என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள்.

நான் ஏற்கனவே கூறியதுபோல நீங்கள் சில தாக்குதல்களில்வெற்றி பெறுகின்றீர்கள் என்பது உண்மையே. இதன் பொருள் ஒட்டுமொத்தமான யுத்தத்தில் வெற்றி பெற்றதென்பதல்ல.

அதேசமயம் சிறிலங்கா இராணுவம் சில தாக்குதல்களில் தோற்றாலும் முழுமையானயுத்தத்தில் வெற்றி பெற்று வருவதையே அவர்களின் தாக்குதல்கள் காட்டுகின்றன.

இன்று அரசுடன் பேரம் பேசும் ஆற்றலையும் நீங்கள் இழந்து வருவது உங்களுக்குப் புரிகின்றதா?

தமிழீழத்தைப் பெற்றுக்கொடுப்போம் என நீங்கள் பல தடவை உறுதி மொழி கொடுத்தீர்கள். நாங்களும் அதை நம்பினோம். இதனால் எவ்வளவுதான் துன்பப்பட்ட போதும் உங்களுக்கு ஆதரவு தந்தோம். இன்று எல்லோராலும் பாதிக்கப்பட்டு களைத்துவிட்டோம்.

உங்களுடன் இருந்து உங்களையே காட்டிக்கொடுத்த பல தலைவர்கள் இன்று கனடாவிலும் வேறு நாடுகளிலும் சுகபோக வாழ்க்கை நடாத்துகின்றார்கள். இது கூட, கனடாவிலும் உங்களுடன் இருந்து உங்களையே கனடிய பொலீசுக்கு காட்டிக்கொடுத்தபோதுதான் அம்பலமாகியது. ஆனால் ஒன்றுமறியாத அப்பாவிகளை துரோகிகள் என இன்றும் கொலை செய்கின்றீர்கள்.

உங்களுக்குத் தாளம் போடும் அரசியல்வாதிகள் பாராளுமன்றத்தில் உலா வரலாம், சுதந்திரமாகத் திரியலாம். ஆனால் பலாத்காரமாக பிடிக்கப்பட்டுப் பிரதேசசபை உறுப்பினர் ஆனவர்களைப் போய் நீங்கள் • கொலை செய்வீர்கள். இது எந்தவகையில் உங்களுக்கு நியாயமாகத் தோன்றுகின்றது?

இதன் பொருள் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொல்ல வேண்டுமென்பதல்ல. அடுத்த தேர்தலில் அவர்களை மக்களே வீடுகளுக்கு அனுப்பி விடுவார்கள்.

ஆனால் அப்பாவி பிரதேசசபை உறுப்பினர்களை கொல்லாதீர்கள் என்றுதான் கேட்கிறேன்.

உங்களுக்குப் பயந்து மக்கள் வாயடைத்துப் போயுள்ளதால், உங்களை விமர்சிக்க மாத்திரமல்ல, அரசின் தவறுகளைச் சுட்டிக்காட்டவே மக்கள் தயங்குகின்றார்கள். இதனால் நீங்கள் செய்யும் தவறுகள் கூட உங்களுக்குத் தெரியாமல் போய் விடுகின்றது.

இராணுவ ரீதியாகவும், ராஜதந்திர ரீதியாகவும் நீங்கள் பலவீனமாகிப் போயுள்ளதால், அரசும் கூட தான் சொல்வதுதான் தீர்வென்ற நிலைக்குப் போகின்றது.

இந்நிலையில் அரசுக்கெதிராக போராடவேண்டிய மக்கள் நடப்பவை நடக்கட்டும் என்ற மனோபாவத்திலேயே காலத்தைக் கடத்துகின்றார்கள்.

எனவே, நீங்கள் நடாத்தும் சில தாக்குதல்களில் நீங்கள் வெற்றி அடைவதால் உங்கள் முதுகில் நீங்களே தட்டிக் கொள்ளாமல், நாம் எங்கு நிற்கின்றோம் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள்.

ஒன்றில் உண்மையான உறுதியான பேச்சுவார்த்தைக்கு, உங்கள் தலைமையை நிர்ப்பந்தியுங்கள். இல்லையேல் பரந்துபட்ட வெகுஜனப் போராட்டத்தை நடாத்த மக்களை அனுமதியுங்கள்.

இதிலும் தவறினால், தமிழ் மக்களையும் அவர்கள் போராட்டத்தையும் அழித்தவர்கள் நீங்கள்தான் என்பதை வரலாறு கூறும்.

சுந்தரலிங்கம்,
பண்டாரிகுளம்,
வவுனியா.



**எத்தனை பொலிசார் கொலை, எத்தனை இராணுவம் கொலை, எத்தனை ஆயுதங்கள், என்ன ரக ஆயுதங்கள், எத்தனை ஆயிரம் ரவைகள் கைப்பற்றப்பட்டதென விளக்கமெல்லாம் கூறுகின்றீர்கள். ஆனால், இதனால் எவ்வளவு மக்கள் கொல்லப்பட்டார்கள்? எவ்வளவு ஆயிரம் மக்கள் அகதிகளானார்கள்? எவ்வளவு சொத்துப் பத்துக்கள் அழிந்தன? இறுதியில் இவர்களும் அகதிகளாகி இடம்விட்டு இடம்பெயர்ந்து சாக வேண்டியதுதானா? இதையெல்லாம் ஏன் நீங்கள் யோசிப்பதில்லை?**

## புத்துயிர்ப்பு

குவிக்கப்பட்ட மனிதத் தலைகள்
பார்வையிலிருந்து
மறைகின்றன
யாரும் கவனிக்காத வண்ணம்
நான் மிகவும்
சிறியவனாகிறேன்
நான் மரணம் அடைந்தாலும்
குழந்தைகளின் மிருதுவான
புத்தகங்களிலும்
புதிய விளையாட்டுகளிலும்
உயிர்த்தெழுவேன்
கதிரவன் பிரகாசிக்கிறான்,
என்பதைக் கூற

மாண்டெல்ஷ்டாம் –



படிப்பகம்

22, வெளிவட்ட வீதி, வவுனியா சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களால் இரத்தனப்பிட்டிய CRC அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.